வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 27.01.2024 சனிக்கிழமை இதழ் : 27 பக்கங்கள் : 12







# பாராளுமன்ற கூட்டத்தொடர் நள்ளிரவு முதல் ஒத்திவைப்பு

**கொழும்பு, ஜனவரி 27**

**பாராளுமன்றக் கூட்டத் தொடர் நள்ளிரவுடன் நடைமுறைக்கு வரும் வகையில் ஒத்திவைக்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தற்துணிவு அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.**

தற்போதைய - 9ஆவது பாராளுமன்றம் 2020 ஓகஸ்ட் மாதம் ஆரம்பமானது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்தார். இதன் பின்னர், 4 தடவைகள் கூட்டத் தொடர்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. இதன் மூலம், அரசாங்க கணக் குகள் பற்றிய குழு உள்ளிட்ட தற்போ இயங் கும் 50 பாராளுமன்ற குழுக்கள் கலைந்தன.

புதிய கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு ஜனாதிபதியின் சிம்மாசன உரையுடன் ஆரம்பமாகும். இதன் பின்னர், ஜனாதிபதியால் பாராளுமன்ற குழுக்களுக்கான உறுப்பினர் நியமனம் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எம்முடன் சேர்ந்து பயணிக்க தமிழ் அரசு முன்வரவேண்டும்

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியுடன் இணைந்து பயணிக்க இலங்கை தமிழ் அரசு கட்சி முன்வரவேண்டும் என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

புதிய தலைவராகப் பதவியேற்ற பின்னர் சிவஞானம் சிறீதரன் ஐக்



கியத்தை பற்றிப் பிரஸ்தாபித்திருப்பதை வரவேற்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினராகிய நாம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் எம்முடன் இணைந்து பயணிக்க முன்வரவேண்டும் என்றும் வேண்டுகிறோம்.

2002ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் செயல்பட்டுவந்தனர். தமிழ்மக்களின் உரிமைகளை

11

மட்டு. பழைய மருத்துவமனை உட்பட

# இரண்டு அரச கட்டடங்கள் சிறைச்சாலையாகின்றன!

கொழும்பு, ஜன. 27

மட்டக்களப்பு பழைய மருத்துவமனை உள்ளடங்கலாக அரசாங்கத்துக்கு சொந்தமான இரு கட்டடங்களை சிறைச்சாலையாக மாற்றுவதற்கு நீதி, மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலைகளில் காணப்படும் இட நெருக்கடிக்கு தீர்வாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தற்போது 32 ஆயிரத்துக்கும் அதிகமான கைதிகள் சிறைச்சாலையில் உள்ளனர். எனினும், 13 ஆயிரம் கைதிகளுக்கு போதுமான இடவசதி மட்டுமே சிறைச்சாலைகளில் காணப்படுகிறது. எனவே, ஹெந்தலையிலுள்ள தொழுநோயாளர் மருத்துவமனையின் சில

11

# இலங்கை தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலர் தெரிவு இன்று

## திருமலையில் கூடுகின்றது மத்திய குழு

கொழும்பு, ஜன. 27

இலங்கை தமிழ் அரசு கட்சியில் பொதுச் செயலாளர் உள்ளிட்ட முக்கிய பதவிகளுக்கான தெரிவுகள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன. திருகோணமலையில் நடைபெறும் கட்சியின் மத்திய குழு - பொதுச் சபைக் கூட்டத்திலேயே இந்தத் தெரிவுகள் நடைபெறவுள்ளன.

திருகோணமலை - உப்புவெளி - பீச் ஹோட்டலில் மத்திய குழு கூட்டம் நடைபெறும் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தில், கட்சியின் பொதுச் செயலர் பதவிக்கு கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கட்சியின் புதிய தலைவர் சி. சிறீதரன் மட்டக்களப்பை சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசனை பொதுச் செயலராக நியமிக்க விரும்புகிறார் என்று அறிய வருகின்றது.

இதேநேரம், வடக்கை சேர்ந்த குலநாயகம் உள்ளிட்ட கட்சியின் மேலும் 5 பேர் பொதுச் செயலர் பதவியை கோருவதற்கு தயாராகி வருகின்றனர்

11

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்:

# எதிரான மனுக்கள்மீது புதன் முதல் விசாரணை!

கொழும்பு, ஜன. 27

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள்மீதான மேலதிக விசாரணையை எதிர்வரும் புதன் மற்றும் வியாழக்கிழமை முன்னெடுப்பதற்கு உயர் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, ஏ. எச். எம். டி. நவாஸ், ஷிரான் குணரத்ன, அர்ஜுன ஒபேசேகர ஆகிய ஐந்து நீதியரசர்களின் அமர்வில் இந்த மனுக்கள் மீதான விசாரணை நேற்று நடந்தது.

யுத்தம் நிறைவடைந்து பல வருடங்கள் கடந்துள்ள நிலையில் - புதிய பயங்கரவாத அமைப்பு ஒன்று மீண்டும் உருவாகும் எனக் கருதக்கூடிய சூழல் காணப்படாத பின்னணியில் - இவ்வாறான சட்டமூலத்தின் ஊடாக எதிர்

11

# பெண் ஊழியரிடம் பாலியல் இலஞ்சம் கோரியவர் கைது!

## தனியார் துறையில் ஊழல் தடுக்கும் ஆணைக்குழு அதிரடி நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 27

தனியார் துறையில் பணியாற்றும் யுவதியை பணி நிரந்தரம் வழங்குவதற்காக பாலியல் இலஞ்சம் கேட்டு அவரை ஹோட்டல் அறைக்கு அழைத்து சென்ற குற்றச்சாட்டில் ஹோட்டல் ஒன்றின் கணக்காளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதிய ஊழல் தடுப்பு சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், இலஞ்சம்

11

அல்-ஹைடாவுக்கு உதவி

# நான்கு இலங்கையர்களுக்கு சிவப்பு பிடியாணை உத்தரவு

கொழும்பு, ஜன. 27

சர்வதேச பயங்கரவாத அமைப்பான அல் - ஹைடாவுக்கு உதவினர் என்று கூறப்படும் இலங்கையை சேர்ந்த நால்வரை கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசிங்க நேற்று சிவப்பு பிடியாணை பிறப்பித்தார்.

பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப்

11

டெங்கு பரவும் சூழல்

# யாழ். நகர வர்த்தகர்களுக்கு அரசாங்க அதிபர் எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 27

டெங்கு நோயை கட்டுப்படுத்தும் சமூக நோக்கில் யாழ்ப்பாணம் மாநகரம், திருநெல்வேலி வர்த்தக நிலைய உரிமையாளர்கள் இன்றைய தினம் தமது சுற்றுப்புறங்களை துப்பரவு செய்ய வேண்டும் என்று யாழ். மாவட்ட செயலாளர் சிவபாலசுந்தரன் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

11

# சனத் நிஷாந்தவின் சாரதிக்கு மறியல்!

கொழும்பு, ஜன. 27

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். வெலிசர நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசு கட்சியின் ‘முதல் ரவுண்ட்’ மோதல் முடிவடைந்து இன்று இரண்டாவது மோதல் நடக்கவிருக்கின்றது.

கட்சிக்கு தலைவர் பதவி எவ்வளவு முக்கியமானதோ அதேபோலவே பொதுச்செயலாளர் பதவியும் முக்கியமானது. அந்தப் பதவிக்கான தெரிவு மாத்திரமன்றி, கட்சியின் ஏனைய பதவிகளுக்கான நியமனங்களும் இன்று நடைபெறவிருக்கும் பொதுச் சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படவிருக்கின்றன.

கட்சியின் மரபுகள் இந்த ஆண்டு தொடர்ந்தும் மீறப்பட்டு வருவதையே நாம் கண்டுகொண்டிருக்கின்றோம்.

கட்சியின் தலைவர் பதவிக்காக கட்சியின் ஏழு தசாப்த மரபு மீறப்பட்டு முதல் தடவையாக தேர்தல் நடை பெற்றது. தேர்தல் நடைபெற்றது என்று சாதாரணமாகக் கூறிவிடும் அளவுக்கு நிலைமை இருக்கவில்லை. பதவிக்காக போட்டியிட்ட இருவரும் வடக்கு, கிழக்கு மாகாணம் எங்கும் உள்ள கட்சி முக்கியஸ்தர்களை தொடர்ந்து சந்தித்து தமக்கான பிரசாரத்தை நடத்துகின்ற அளவுக்கு நிலைமைகள் இருந்தன.

கடந்த இருபத்தியோராம் திகதி தலைவரை தெரிவுசெய்வதற்காக திருகோணமலையில் பொதுச்சபை கூடியபோது, அங்கு திரண்டிருந்த கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களும் வேட்பாளர்களின் ஆதரவாளர்களும் நகரத்தில் நீண்ட காலத்துக்குப் பின்னர் ஒன்றாகக் காணப்பட்டனர்.

அங்கு கூடியிருந்த கட்சியினரைப் பார்த்த நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொன்னார், “இனி இப்படி தேர்தலையும் அறிவித்துவிட்டு, தமிழ் அரசுக் கட்சி ஏதாவது போராட்டத்துக்கும் அழைப்பு விடுத்தால், போராட்டத்தில் சனங்கள் கூடியதை காட்டலாம்”, என்றார். அவ்வளவு தூரம் அங்கே மக்கள் கூட்டத்தைக் காண முடிந்தது.

இன்று நடக்கும் பொதுச் செயலாளர் தெரிவும் அது போலத்தான் இருக்குமா என்பது தெரியவில்லை. ஏனெனில், அந்தப் பதவிக்குக் குறி வைத்திருக்கும் எவரும் கட்சியினர் மத்தியில் பிரசாரம் செய்ததாகத் தெரியவில்லை.

ஆனால், பொதுச்செயலாளர் நியமனத்தில் தனக்கு சாதகமானவர் - அதாவது தன்னோடு சேர்ந்து இயங்கக் கூடிய ஒருவர் தெரிவாகவேண்டும் என்று புதிய தலைவர் விரும்புவது இயல்பானதுதான். ஆனால், இது விடயத்தில் அவருக்கு ‘செக்’ வைக்கவும் சிலர் முயற்சி எடுக்கலாம். ஏற்கனவே, இந்தப் பதவிக்கு பலர் குறி வைத்திருப்பதாகவும் சுமார் ஆறு பேரின் பெயர்கள் தெரிவின்போது முன்வைக்கப்படலாம் என்றும் சில செய்திகள் தெரிவித்தன. அவ்வாறு பலர் போட்டியிடுகின்றபோது, யாருக்கு வாக்களிப்பது என்பதில் குழப்பம் ஏற்படலாம்.

இதுகாலவரை தமிழ் அரசின் வரலாற்றில் தலைவர் பதவி வடக்குக்கு என்றால், செயலாளர் பதவி கிழக்குக்கு என்பதே எழுதப்படாத விதியாக இருந்து வருகின்றது.

அதுவும் இந்தத் தடவை மீறப்படலாம் என்ற சந்தேகம் கட்சியினர் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. ஆறு பேர் அந்தப் பதவிக்கு போட்டியிட்டால் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவரே தெரிவாவதற்கு சந்தர்ப்பம் ஏற்படலாம். அதிக உறுப்பினர்கள் வடக்கில் இருப்பது இதற்குக் காரணமாகலாம்.

கிழக்கு மாகாணத்தவருக்கு அந்தப் பதவி செல்லவேண்டும் என்பதல்ல. ஏனெனில், அங்கிருந்தும் சில கோரிக்கைகள் வருகின்றனவாம். இந்தத் தடவை கிழக்கில் திருமலை அல்லது அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.

எமது கவலை எல்லாம்,

இன்னமும் வடக்கும் கிழக்கும் என்னதான் தமிழ்த் தேசியம் - ஒற்றுமை என்று பேசினாலும் தமக்குள் பிரிந்துதான் கிடக்கின்றன என்பதையே இந்தக் கோரிக்கைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. கிழக்கு மாகாணத்தவன் ஏற்றுக்கொள்ளும் தலைவன் இன்னமும் வடக்கில் தோன்றவில்லை என்பதும் வடக்கு மாகாணத்தவன் ஏற்றுக்கொள்ளும் தலைவன் கிழக்கில் தோன்றவில்லை என்பதும்தான். என்னதான் தமிழ்த் தேசியம் பேசினாலும் வடக்கு - கிழக்கு தவிர்ந்து ஒரு தமிழ்த் தேசியத் தலைவனை தமிழ் அரசுக் கட்சியால் உருவாக்க முடியவில்லை என்பதுதான் கவலைக்குரியது.

வடக்கு தமிழ் அரசு - கிழக்கு தமிழ் அரசு என்று பிரிந்துவிடாமல் பார்த்தாலே போதுமானதோ என்று கட்சியின் விசுவாசிகள் நினைத்துக் கொண்டிருக்கின்றனராம்.

இன்றைய தெரிவு எப்படி இருக்கின்றது என்று பார்ப்போம்.!

**- ஊர்க்குருவி.**

# இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல்; அநுரவின் வெற்றியும் நிச்சயம்!

## ரில்வின் சில்வா நம்பிக்கை

கொழும்பு, ஜன. 26

ஜனாதிபதி தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கே. வரும், செப். 17 - ஒக். 17 இற்கு இடையே தேர்தல் நடக்கும். அதில், அநுரகுமார திஸநாயக்க வெற்றி பெறுவார் என்று களுத்துறை மாவட்ட மீனவர் மாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக் குழுவுக்குத்தான் இருக்கிறது. எனவே, இந்த வருடம் செப்ரெம்பர் 17 - ஒக்ரோபர் 17 ஆம் திகதிக்கு இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். அதில் சந்தேகமில்லை. அந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க வெற்றி பெறுவார் என்பதில் சந்தேகமில்லை.

எம்மவர் ஜனாதிபதியான தன் பின்னர் இந்தப் பாராளுமன்றம் எமக்குத் தேவையில்லையே. எனவே, இந்தப் பாராளுமன்றத்தை கலைத்து புதிய பாராளுமன்றம் ஒன்றை ஸ்தாபித்து இந்த நாட்டை முன்னேற்ற வேண்டும்.

அநேகமாக முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று நாங்கள் நினைக்கிறோம். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு தேசிய மக்கள் சக்தியே அன்றி வேறெதற்கும் இல்லை.

சாதாரண மக்களின் ஆய்வுகள் மாத்திரம் அல்ல. உளவுத் துறை தகவல்களும் அதனைத்தான் கூறுகின்றன. எனவே, எவரும் பதற்றமடையத் தேவையில்லை. இதனால் இப்போது ஆட்சியாளர்கள் பதற்றமடைந்துள்ளார்கள். எங்களிடமிருந்து தவறுதலாக வெளிவரும் ஒரு சொல்லை பிடித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

அதை வைத்துக் கொண்டு அவர்களுக்கு விரும்பிய கதையை புனைவார்கள். அந்தக் கதைக்கு ஊடக உரையாடல் இடம்பெறும். அதற்காக பிக்கெட்டிங் செய்வார்கள். பத்து பதினைந்து பேரை சேர்த்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வார்கள். எமது கொள்கையை நாம் தெளிவுப்படுத்துகின்ற போதிலும் அதற்கு அவர்கள் செவிசாய்க்க மாட்டார்கள்.

ஏனென்றால், அந்தளவுக்கு தேசிய மக்கள் சக்தி அவர்களுக்கு சவாலாக அமைந்துள்ளது. எனவே, இந்த நாட்டை நாசமாக்கிய சக்திகள் பயந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் எங்களுக்கு எதிராக சேறுபூசுகிறார்கள். அவதூறு கற்பிக்கிறார்கள் - என்றார். (ஐ)

# புதையல் தோண்டினர் என தேரர் உட்பட 11 பேர் கைது

கொழும்பு, ஜன. 27

அநுராதபுரம் - தம்புத்தேகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் பின்புறத்தில் புதையல் தோண்டியதாக கூறப்படும் தேரர் உட்பட 11 பேர் புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து பைக்கோ இயந்திரம், டிராக்டர், கார் மற்றும் பூசை பொருட்கள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரை ஒன்றின் தேரராவார்.

கைது செய்யப்பட்டவர்களில் 17 வயதுடைய பாடசாலை மாணவர்கள் மூவர் அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# ஓ. எல். பரீட்சை வினாத்தாள் கசிவு; கைதான மூவரின் மறியல் நீடிப்பு!

அம்பாறை, ஜன. 26

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞானம் பகுதி 1 மற்றும் பகுதி 2 வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியான விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூவரும் எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை பிரதான நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான நவோமி விக்ரமரத்னவே இவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

பரீட்சைக்கு முன்னரே இந்த வினாத்தாள்கள் வெளியான விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் இதுவரை மூவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர். (ஐ)

# கசிப்புடன் பெண் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 26

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஊரெழு மேற்கு பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை கசிப்புடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தப் பெண் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 10 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த கோப்பாய் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பாடசாலைச் சமூக கரும்பு நடுகை விழா

கிளிநொச்சி, ஜன. 27

பாடசாலை சமூக கரும்பு நடுகை விழா நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி கலைமகள் வித்தியாலய முதல்வர் பி.கணேசன் தலைமையில் இடம்பெற்றது.

விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விழா மண்டபம் வரை அழைத்து செல்லப்பட்டனர்.

தொடர்ந்து மங்கள விளக்கேற்றப்பட்டு இறை வணக்கம் இடம்பெற்றது.

பின்னர் கரும்பு செய்கை நிலத்தில் கரும்பு நாட்டி வைக்கப்பட்டது.



குறித்த திட்டத்திற்கு பிரித்தானியாவில் வாழும் வைத்திய கலாநிதி இ.சதானந்தன் நிதி உதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், அயல் பாடசாலை அதிபர்கள், விவசாயிகள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை சமூகத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(அ)

ஈழநாடு
Eelanadu
27.01.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், தை 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# காலத்தை கையாளுதல்

அரசியல் என்பது காலத்துடன் தொடர்புபட்டது. ஒரு காலகட்டத்தில் சரியாகத் தெரியும் விடயங்கள் இன்னொரு காலத்தில் சரியாக இருப்பதில்லை. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமிழ் மக்களின் உரிமை அரசியலுக்கு மாறான பாதையில் பயணிப்பதாகக் கூறியே எஸ். ஜே. வி. செல்வநாயகம் இலங்கை தமிழ் அரசு கட்சியை உருவாக்கினார். சமஷ்டியை அடைவதே தமிழ் அரசு கட்சியின் இலக்காக முன்வைக்கப்பட்டது.

இதன் காரணமாகவே, தமிழ் அரசு கட்சியானது ஆங்கிலத்தில் சமஷ்டி கட்சியென்று அடையாளப்படுத்தப்பட்டது. ஆனால், சமஷ்டியை செல்வநாயகத்தால் அடைய முடியவில்லை. ஏனெனில், அதனை சிங்கள ஆளும் வர்க்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. சமஷ்டியை ஒரு பாய்ச்சலில் அடைய முடியாது என்பதை உணர்ந்தே பண்டா - செல்வா உடன்பாட்டின்போது, டட்லி - செல்வா உடன்பாட்டின்போது செல்வநாயகம் சமஷ்டி கோரிக்கையை அழுத்தவில்லை. ஆகக் குறைந்த அதிகாரங்கள் தொடர்பிலேயே பேசினார். ஆனாலும், அதிலும் வெற்றிபெற முடியவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் செல்வநாயகத்தின் சமஷ்டிக்கான காலகட்டம் தோல்வியில் முடிந்தது. சமஷ்டியை அடைவதில் தோல்வியடைந்த செல்வநாயகம் தனிநாட்டுக் கோரிக்கையை நோக்கிச் சென்றார். செல்வநாயகம் தலைமையிலான அரசியல் நகர்வுகளில் அதிருப்தியுற்ற இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை நோக்கிச் சிந்திக்கத் தலைப்பட்ட சூழலில்தான் செல்வநாயகம் தனிநாட்டுக் கோரிக்கையை கையில் எடுக்கின்றார். ஆனால், அவ்வாறானதொரு நிலைப்பாட்டுக்குத்தான் செல்ல வேண்டுமென்று வி. நவரத்தினம் வாதிட்டபோது அதனை மறு தலித்தவர் செல்வநாயகம். ஆனால், தான் தூக்கிவீசிய ஒன்றை தானே கையிலெடுக்கின்றார்.

தர்க்கரீதியில் நோக்கினால் செல்வநாயகத்தின் அணுகுமுறை சரியானதா என்னும் கேள்வியே எழும். ஏனெனில், சமஷ்டியை அடைவதில் தோல்வியடைந்த செல்வநாயகத்தால் எவ்வாறு தனிநாட்டுக்கான பாதையை உருவாக்க முடியும்? இந்தக் கேள்வியை அன்று எவருமே கேட்கவில்லை. கேள்விகள் கேட்கும் சமூகமொன்று நமது சமூகத்தில் அப்போதும் இருந்ததில்லை - இப்போதும் இல்லை. அன்றைய இடதுசாரிகள் கேட்டனர். ஆனால் அவர்களால் தமிழர் அரசியலை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை.

தனிநாட்டுக்கான கோரிக்கையை முன்வைத்தே தமிழர் விடுதலைக் கூட்டணி 1977 பொதுத் தேர்தலில் போட்டியிட்டது - பெரும் வெற்றியும் பெற்றது. அமிர்தலிங்கம் எதிர்கட்சித் தலைவருமானார். ஆனால், தனிநாடு பற்றிப் பேசியவர்கள் சடுதியாக மாவட்ட சபையை நோக்கித் திரும்பினர். ஏனெனில், தனிநாட்டை உச்சரித்தாலும் அது ஒரு விசித்திர உலகவாதம் என்பதில் அனைவருக்குமே தெளிவிருந்தது. இந்தக் காலத்தில் ஆயுத இயக்கங்கள் வளர்ச்சியுற்றிருந்தன. மிதவாதிகள் தங்களில் செல்வாக்கை இழந்து கொண்டு சென்றகாலம். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் மாகாண சபை அறிமுகமானது.

பின்னோக்கிப் பார்த்தால், செல்வநாயகம், காலத்தை கையாளும் ஓர் உத்தியாகத்தான் கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார் என்னும் முடிவுக்கே வரவேண்டியிருகின்றது. கோரிக்கைகளை உச்சளவில் முன்வைத்தாலும்கூட சிறியளவில் கதவு திறந்தாலும் அதன் வழியாக நுழைய வேண்டும் என்பதே அன்றைய அணுகுமுறையாக இருந்தது. அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரண தேவி என்னும் நிலைப்பாட்டில் செல்வநாயகமும் இருக்கவில்லை - அமிர்தலிங்கமும் இருக்கவில்லை. அந்த வகையில் செல்வநாயகத்தின் அசல் அரசியல் வாரிசாகவே அமிர்தலிங்கம் இருந்தார். விடுதலைப் புலிகளின் அணுகுமுறையானது தெளிவானது அதாவது, ஒன்றில் மகாதேவி இல்லையேல் மரண தேவி.

2009இற்கு பின்னர் மீண்டும் காலத்தைப் புரிந்து கொண்டு அரசியலை முன்னெடுப்பதற்கான சூழல் உருவாகியிருக்கின்றது. அதனைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப செயலாற்றும் வல்லமையுள்ள தலைமைகள் இருக்கின்றனவா என்னும் கேள்வியுடனேயே தமிழரின் அரசியல் காலகட்டம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. காலத்தை கையாளத் தெரிந்தால் மட்டுமே தமிழர்களுக்கான அரசியல் என்று ஒன்றிருக்கும்.

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்!

*யாழ்ப்பாணம், ஜன. 26*

ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் யாழ். பொது நூலகத்தில் இருந்து பேரணியாக யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்கு சென்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் உள்ளிட்ட தென்னிலங்கை ஊடக அமைப்புகளின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# ‘ஆளப்போகும் வேர்கள்’ நூல் வெளியீடு இன்று

*யாழ்ப்பாணம், ஜன. 26*

தேசிய கலை இலக்கியப் பேரவையால் ‘நூறு மலர்கள் மலரட்டும்’ என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 16ஆவது நிகழ்வு கோப்பாய் தெற்கு, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடக்கிறது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்த நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில், இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள மூன்றம் நாள் நிகழ்வுகளில் மாலை நிகழ்வாக எழுத்தாளர் வடகோவை வரதராஜனின் விவசாய மெய்ப்புனைவுகளின் தொகுப்பான ‘ஆளப்போகும் வேர்கள்’ நூல் வெளியீட்டு நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஓய்வு பெற்ற மாகாண விவசாயப் பணிப்பாளரான சிவபாதம் சிவகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், நூல் வெளியீட்டுரையை ஏறாவூர் கஸல் பதிப்பக நிர்வாகி முகமட் சப்றி, விமர்சன உரைகளை “இலக்கிய உத்திகள்“ பற்றி யாழ் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன், விவசாய நுட்பங்கள் தொடர்பாக ஓய்வுபெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர் சரவணமுத்து சிவநேசன், ஏற்புரையை நூலாசிரியர் வடகோவை வரதராஜன் ஆகியோர் ஆற்றுவர்.

இந்த நூலின் கௌரவப் பிரதிகளை கோப்பாயைச் சேர்ந்த மூத்த முன்னோடி விவசாயியான கைலாய பிள்ளை குமரகுருநாதன், ஏழாலையைச் சேர்ந்த நவீன விவசாயியான பாலசிங்கம் திருமாறன், ஓய்வுபெற்ற விவசாய ஆசிரியர் அருளையா பேரின்பநாயகம் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர்

இந் நிகழ்வின் விசேட அம்சங்களாக காலை 9 மணி முதல் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நடைபெறும். மாலை 5 மணிக்கு சண் நாடகக் குழுவின் தயா ரிப்பில், பு.கணேசராஜா வின் நெறியாள்கையில் ‘காதலுக்கு மருந்து’, ‘அரோகரா’ ஆகிய நாடகங்கள் அரங்கேறவுள்ளன. (ஐ)

# ‘விஷ்வ புத்த’ மீண்டும் விளக்கமறியலில்!

*கொழும்பு, ஜன. 27*

பௌத்த மத கருத்துகளை இழிவுபடுத்திய குற்றச்சாட்டில் கைதான ‘விஷ்வ புத்த’ என்ற நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


அவர் நுகேகொட நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத் தப்பட்ட போது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பௌத்த கருத்துகளை இழிவுபடுத்தி சமூக ஊடகங்களில் அவர் வெளியிட்ட கருத்துக்களை தொடர்ந்து கடந்த வாரம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர், நுகேகொடை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது அவர் நேற்று வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், நேற்று நுகேகொடை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜனவரி - 27** சனிக்கிழமை
**சோபகிருது வருடம் - தை 13**
**நல்ல நேரம் : 03.36 - 05.06**
**ராகு காலம் : 09.36 - 05.06**
**திதி : துதியை**




**மேடம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வெளியூர்பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. புது வேலை அமையும்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார்.

**மிதுனம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப்பிடியுங்கள்.

**சிம்மம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உதவிக் கேட்டு தொந்தரவு தருவார்கள். உணர்ச்சிவசப்பட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**துலாம்**
உணர்வுகளை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். அந்தஸ்து உயரும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்- மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவர்களின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். மனசாட்சிப் படி செயல்படும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தில் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி இருக்கும். வேலையாட்களால் விரயம் வரும்.

**மகரம்**
கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி சாதிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். அமோகமான நாள்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். நட்பு வட்டம் விரியும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

# சாந்தனையும் ஏனையவர்களையும் அரசாங்கம் உடன் விடுவிக்கவேண்டும்!

## நாம் தமிழர் சீமான் அறிக்கை

சென்னை, ஜன. 27

திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள சாந்தன் மற்றும் றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார், முருகன் ஆகியோரை தமிழக அரசு உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்குண்டு 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறைக் கொட்டடியில் அடைப்பட்டிருந்த நிலையில், ஓராண்டுக்கு முன்பு உயர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு திருச்சி, சிறப்பு முகாமிலிருக்கும் தம்பி சாந்தன் சிறுநீரகம், கல்லீரல் ஆகியவை பாதிக்கப்பட்டு, உயிருக்கு ஆபத்தான நிலையிலிருக்கிற செய்தியானது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

சிறப்பு முகாம் எனப் பெயரளவில் கூறப்பட்டாலும், தம்பிகள் சாந்தன், றொபேர்ட் பயஸ், முருகன் மற்றும் அண்ணன் ஜெயக்குமார் ஆகியோர் மற்றுமொரு கொடுஞ்சிறையில்தான் அடைக்கப்பட்டிருக்கின்றனர். ஒரு சிறையில் சிறைவாசிகளுக்கு வழங்கக்கூடிய அடிப்படை உரிமைகளைக்கூட மறுத்து, சிறப்பு முகாமில் வைத்து அவர்களை வதைத்து வரும் போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

ஏற்கனவே, தம்பி றொபேர்ட் பயஸ் முதுகுத் தண்டு வலியாலும், சுவாசப் பிரச்னைகளாலும், அண்ணன் ஜெயக்குமார் கண்பார்வைக் குறைபாடுகளாலும் அவதிப்பட்டு வரும் நிலையில், தம்பி சாந்தனுக்கு சிறுநீரகம் மற்றும் கல்லீரல் சிக்கல் ஏற்பட்டிருப்பது பெரும் வேதனையை அளிக்கிறது. "'ழத்தமிழர் எங்கள் இரத்தம்' எனத் தேர்தலுக்கு முன்பு முழங்கிய ஐயா ஸ்டாலின், ஈழத்தமிழர்களான தம்பிகள் சாந்தன், றொபேர்ட் பயஸ், முருகன் மற்றும் அண்ணன் ஜெயக்குமார் ஆகியோரை சிறப்பு முகாமிலே வைத்து, எஞ்சிய அவர்களது வாழ்வையும் முடித்துவிட எண்ணுகிறாரா? சிறப்பு முகாமிலேயே வைத்து அவர்களைச் சாகடிப்பதுதான் விடியல் ஆட்சியா?

தம்பி சாந்தனை உடனடியாக விடுவித்து, மருத்துவமனையில் அவருக்கு உயர்தர சிகிச்சை அளிக்க வேண்டும். அவரின் விருப்பத்தின்படி இலங்கைக்கு அனுப்பத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இத்தோடு, தம்பி றொபேர்ட் பயஸ், தம்பி முருகன் மற்றும் அண்ணன் ஜெயக்குமார் ஆகியோரை அவர்களது விரும்புகிற நாட்டுக்கு அனுப்பி வைக்க தேவையான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமெனவும் கேட் டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

# 28 அமாவாசைகள் மட்டுமே தி. மு. க. அரசாங்கம் இருக்கும்!

## எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஜன. 27

இன்னும், 28 அமாவாசைகள் மட்டுமே, தி. மு. க. அரசு இருக்கும் என்று அ. தி. மு. க. பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

கோவை மாவட்டம் - மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ்மீது பெண்களை தொந்தரவு செய்வது உட்பட பல்வேறு பிரிவுகளில், வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

நடுநிலையோடு செயல்பட வேண்டிய பொலிஸ் தி.மு.க.,வினர் பேச்சை கேட்டு பொய் வழக்குகள் போட்டு எதிர்க் கட்சி நிர்வாகிகளை முடக்கி விடலாம் என்ற இருமாப்பில் செயல்படுவது அழகல்ல.

சட்டப்படி இன்னும், 28 அமாவாசைகள் மட்டுமே, தி.



மு. க., அரசு இருக்கும் என்பதை உணர்ந்து பொலிஸார் நேர்மையாக பணிபுரிய வேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)



# விஜயகாந்துக்கு பத்மபூஷன் விருது

புதுடில்லி, ஜன. 27

விஜயகாந்த் உள்ளிட்ட தமிழகத்தை சேர்ந்த 5 பேருக்கு 2024ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை மத்திய அரசாங்கம் நேற்று அறிவித்தது.

கலை, இலக்கியம் மற்றும் கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப்பணி, அறிவியல் மற்றும் பொறியியல், பொது விவகாரங்கள், சமூக சேவை, வர்த்தகம், தொழில்துறை போன்ற அனைத்து துறைகளில் தனித்துவமான மற்றும் சிறப்பான / சாதனைகள் / சேவைகளுக்காக இந்திய மத்திய அரசு சார்பில் பத்மசிறீ , பத்ம பூஷன், பத்ம விபூஷன், ஆகிய பத்ம விருதுகள் வழங்கப்படுகிறது.

அதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. விருதுக்கு தெரிவு பெற்றவர்களுக்கு ராஷ்டிரபதி மாளிகையில் ஜனாதிபதி திரௌபதி முர்மு வழங்கி கௌரவிப்பார். (ஐ)

# "காலம் கடந்த விருது" திருமதி விஜயகாந்த்

சென்னை, ஜன. 27

விஜயகாந்த் உயிருடன் இருந்த காலத்திலேயே விருது வழங்கப்பட்டிருக்க வேண்டும் - என்று பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தே. மு. தி. க. தலைமை பணிமனையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, "விஜயகாந்த் உயிருடன் இருந்த காலத்திலேயே விருது வழங்கப்பட்டிருக்க வேண்டும். விஜயகாந்த் இருந்தபோதே கொடுத்திருந்தால் சந்தோசமாக பெற்றிருப்போம். விஜயகாந்த் மறைந்து 30 நாட்களுக்கு பிறகு இந்த சிறப்பை மத்திய அரசு கொடுத்துள்ளது. விஜயகாந்த் மீது அன்பு வைத்திருந்தவர்களுக்கு பத்ம பூஷன் விருதை சமர்ப்பிக்கிறோம் - என்றார். (ஐ)



# சுதந்திரதினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்த வேண்டும்!

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

**இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்த வேண்டும் என அழைப்பு விடுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சிங்கள மக்களுக்கும் கரிநாள் என்பது பொருத்தமானதே என தெரிவித்தனர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தீவிலே தமிழ் மக்கள் தங்கள் இருப்புக்களை தக்க வைப்பதற்கு அன்றிலிருந்து இன்று வரை தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அதனடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தினை கரி நாளாக பிரகடனப்படுத்தி வடக்கு-கிழக்கு தழுவிய பிரகடனத்தை பொதுமக்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

குறிப்பாக இந்த இலங்கைத் தீவிலே தமிழ் மக்களுக்கான உரிமைகள் இருப்புக்கள் மீறப்பட்டுக் கொண்டே வருகின்றது. ஆட்சிகள் மாறுகின்றது ஆட்சியாளர்களும் மாறிக் கொண்டே இருக்கின்றார்கள்.

ஆனால் தமிழ் மக்களுக்கு இன்று வரை எந்த ஒரு தீர்வு திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. அது வெறும் பேச்சு மட்டத்திலே மாத்திரமே நல்லிணக்கத்தை பேசி வருகின்றார்கள். இதய சுத்தியுடன் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுத்தர சிங்கள தரப்புக்கள் தயாராக இல்லை. வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள்,சிவில் சமூகங்கள் ,சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள், அனைத்து தொழிற்சங்கங்களும் சுதந்திர தினத்தினை கரிநாளாக பிரகடனப்படுத்த ஆதரவினை வழங்க வேண்டும்.

தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தினை சிதைக்கும் நோக்கில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றபட்டுள்ளது. இந்த நாட்டில் ஊடக சுதந்திரத்தை , ஒரு பொதுமகனின் கருத்து சுதந்திரத்தை கூட இந்த அரசாங்கம் பறித்தெடுத்து கொண்டுதான் இருக்கிறது. இதன்மூலம் போராட்டங்களில் ஈடுபடுகின்றவர்களை ஒடுக்க இவ்வாறான சட்டங்களை நடைமுறைபடுத்தி மல்லினப்படுத்தி அவர்களை கைது செய்கின்ற தொலைதூர நோக்கோடு இந்த அரசு செயற்பட்டு வருகின்றது.

இவர்கள் ஒருபொழுதும் தமிழர்களுடைய அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை , காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், வடக்கு கிழக்கில் அத்துமீறி நிகழுகின்ற குடியேற்ற திட்டங்கள், திட்டமிட்ட பௌத்தமயமாக்கலையோ நிறுத்த போவதில்லை. எமக்கான தீர்வு கிடைக்கும் வரை நாம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு ஆகவேண்டும் என்பது வரலாற்று உண்மை.

மேலும் கரிநாள் என்பது சிங்கள மக்களுக்கும் பொருத்தமானதே. காரணம் இன்றைய தினம் சிங்கள மக்களுக்கும் எதிரான சட்டங்கள் உருவாக்கப்பட்ட வண்ணமே உள்ளது. இதனை அனைத்து தரப்புக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

சமநேரத்தில் எங்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். 99 அதனடிப்படையில் 13 ஆவது திருத்தம் தமிழர்களுக்கான ஆரம்பப் புள்ளியோ ,முடிவுப் புள்ளியோ கிடையாது 13 இனை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே தமிழர்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வினை காணாது நாங்கள் எங்களுடைய போராட்டங்களையோ போராட்ட வடிவங்களையோ கைவிடப்போவதில்லை என பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்துகின்றோம்- என்றனர். (அ)




# இந்திய குடியரசு தின நிகழ்வு யாழ். துணைத் தூதரகத்தில்!

யாழ்ப்பாணம், ஜன. 27

இந்தியாவின் 75 ஆவது குடியரசு தின நிகழ்வுகள் யாழ்ப்பாண இந்தியத் துணை தூதுவராலயத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்திய எல்லைப் படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் யாழ். இந்திய துணைத் தூதுவர் அழைத்துவரப்பட்டு, இந்திய தேசிய கொடி ஏற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் இந்திய குடியரசுத் தலைவரின் சிறப்புரையினை யாழ்ப்பாண இந்திய துணைத் தலைவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தளித்தோடு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

குடியரசு தின நிகழ்வில் இந்திய துணைத் தூதுவராலய அதிகாரிகள் இந்தியப் பிரஜைகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# மாமியாரை மண்வெட்டியால் தாக்கிக் கொன்றார் மருமகன்!

கொழும்பு, ஜன. 27

மாமியாரை மருமகன் மண்வெட்டியால் தாக்கி கொலை செய்த சம்பவம் ஒன்று நேற்று முன் தினம் வியாழக்கிழமை கெப்பிற்றிக்கொல்லாவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 53 வயதான மூன்று பிள்ளைகளின் தாயான பெண் ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் மூத்த மகளுக்கும் அவரது கணவருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக மகள் கணவனை விட்டு பிரிந்து தாய் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் சந்தேக நபர் நேற்று முன் தினம் வீட்டுக்கு வந்து மாமியாரின் தலையில் மண்வெட்டியால் தாக்கிய போது இவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கொலை செய்த நபர் காலி பிரதேசத்தில் உள்ள கடற்படை முகாமில் பணிபுரியும் கடற்படை சிப்பாய் என தெரியவந்துள்ளது.

இவரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# டலஸ் அழகப்பெருமவும் கூட்டணியில் இணைவார்?





கொழும்பு, ஜன. 27

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை தனிமைப்படுத்தவில்லை, அவரும் விரைவில் எமது கூட்டணியில் இணைவார் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய கருத்து கணிப்பில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவே முன்னிலையில் உள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சுதந்திரசபை என்பவத்தில் இருந்து உறுப்பினர்கள் எம்முடன் நேரடியாக இணையவுள்ளனர். அடுத்துவரும் நாட்களில் இதற்கான நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

அத்துடன், சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள ஊழல் மோசடியுடன் தொடர்புபடாதவர்களும் வரலாம். எந்தவொரு உறுப்பினரையும் நாம் பேரம் பேசி விலைக்கு வாங்குவதில்லை. கொள்கை அடிப்படையிலான பயணமே தொடர்கின்றது - என்றார். (அ)

# குடாவெல்ல கடலில் குளித்த இளைஞர் நீரில் மூழ்கி பலி!

கொழும்பு, ஜன. 27

குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தை அண்மித்து கடலில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மற்றுமொருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடாவெல்ல கடலில் ஐவர் நேற்று முன் தினம் பகல் குளிக்கச் சென்ற போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

குடாவெல்ல பகுதியை சேர்ந்த 25 வயதான இளைஞர் ஒருவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அதே பகுதியை சேர்ந்த 35 வயதான ஒருவரே இதன்போது காணாமல் போயுள்ளார்.

அவரை தேடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் மற்றுமொரு கோர விபத்து!



கொழும்பு, ஜன. 27

அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஆஸ்திரியா நாட்டு பிரஜையொருவர் பலியாகியுள்ளார்.

37 வயதுடைய ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

வெளிநாட்டவர்கள் பயணித்த வான் ஒன்று லொறியுடன் மோதியதிலே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மூவர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கையிலேயே கடவத்தை மற்றும் கெரவலப்பிட்டிக்கு இடையிலான அதிவேக நெடுஞ்சாலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது . சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# கலைத்தூது அழகியல் கல்லூரி பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஜன. 27

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 13ஆவது பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல.286, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.யோண் குயின்ரஸும்,சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (அ)

# பாடசாலை வளாகங்களுக்குள் போதைப்பொருள் சோதனையா?

## தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு

**கொழும்பு, ஜன. 27**

**பாடசாலை வளாகத்திற்குள் போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டாம் என தொழிற்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.**

**பாடசாலை வளாகப்பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் விசாரணைகளால் மாணவர்களிற்கு உடல் உளபாதிப்புகள் ஏற்படலாம் என கல்வித்துறை தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.**

யுக்திய நடவடிக்கைக்கு சமாந்திரமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும் பொலிஸாரும் பாடசாலைப் பகுதிகளில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள நிலையில் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் பாடசாலைக்குள் எந்த விசாரணைகளையும் மேற்கொள்ளக்கூடாது என தொழிற்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இவ்வாறான விசாரணைகளால் மாணவர்கள் உடல் உளரீதியாக பாதிக்கப்படுவார்கள். அவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம் என இலங்கை ஆசிரியர்கள் சேவைச் சங்கத்தின் பொதுச்செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் இருந்து போதைப்பொருளை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

ஆனால் முழுமையான திட்டமொன்றின்மூலமே போதைப் பொருளை ஒழிக்க முடியும். ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஒரு திட்டத்தினால் அகற்ற முடியாது என அவர் கூறினார்.

ஆட்சியில் உள்ளவர்களின் தேவைக்காக அவர்களை மக்கள் மத்தியில் பிரபலமாக்குவதற்காக இவ்வாறான திட்டங்கள் காலத்திற்கு காலம் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இதனால் ஆசியர்களுக்கும் மாணவர்களுக்கும் எந்த பலனுமில்லை எனவும் குறிப்பிட்டுள்ள மகிந்த ஜயசிங்க, பாடசாலைகளில் போதைப்பொருள் ஒழிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அவற்றை மிகவும் அவதானமாக முன்னெடுக்க வேண்டும். அதன் விளைவுகள் மாணவர்களுடன் நேரடியாக தொடர்புபட்டவை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை பாடசாலைகளில் போதைப்பொருள் விசாரணைகளை முன்னெடுக்கும் திட்டத்தை தங்கள் தொழிற்சங்கம் கடுமையாக எதிர்ப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுசெயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

யாரோ ஒருவரின் பிரசாரத்திற்காக சிறுவர்களை பலிகடாவாக்ககூடாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பல மாதங்களிற்கு முன்னர் மாணவர்கள் ஐஸ் கொண்டுவந்தனர் என தெரிவித்து மாணவர்களின் புத்தகப் பைகளை சோதனையிட்டனர். ஆனால் எதனையும் கண்டுபிடிக்கவில்லை என தெரிவித்துள்ள ஜோசப் ஸ்டாலின், இதுவும் அதே மாதிரியான திட்டம். பாடசாலைகளுக்குள் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றோம் எனவும் குறிப்பிட்டார். (அ)

# தேரரிடம் கப்பம் கோரிய சந்தேக நபர் சிக்கினார்!

கொழும்பு, ஜன. 27

மிஹிந்தலை - ரஜமஹா விகாரையின் பீடாதிபதி வளவாஹெங்குனவே தம்மரத்ன தேரரிடம் தொலைப்பேசியினூடாக அழைப்பு விடுத்து கப்பம் கோரிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் ஒரு கோடி ரூபாவை கப்பமாக கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஜமஹா விகாரையின் பீடாதிபதி குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு செய்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# புதிய திணைக்களத்தை நிறுவுவதற்கு அனுமதி!

கொழும்பு, ஜன. 27

கறுவா அபிவிருத்தித் திணைக்களம் எனும் பெயரில் புதிய திணைக்களமொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை புதிதாக தாபிக்கப்பட்டுள்ள கறுவா திணைக்களத்திற்கு ஒப்படைத்தல் பொருத்தமானது என கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அனைத்துப் பணிகளையும் கறுவா அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

விவசாய மற்றும் பெருந்தோட்டத் துறை அமைச்சர் சமர்ப்பித்த குறித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# கட்டணம் செலுத்தாததால் பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தின் மின்சாரம் துண்டிப்பு!

கொழும்பு, ஜன. 27

பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் மின்சாரம் துண் டிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நிலுவைத் தொகையை செலுத்தாதன் காரணமாகவே மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் மின்சார கட்டண நிலுவைத் தொகை 877,741 ரூபா என ரயில்வே அதிகாரிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த மின்சார துண்டிப்பின் காரணமாக குப்பி விளக்குகள் மற்றும் மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து அதிகாரிகள் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் ஒலிபெருக்கி மூலம் ரயில் நிலையத்தில் அறிவிப்புகள் செய்யப்படுவதில்லை எனவும் டிக்கெட் வழங்குவதற்கு குப்பி விளக்குளை பயன்படுத்துவதாகவும் ரயில்வே அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ)

# புதுக்குடியிருப்பு விபத்தில் இளைஞன் பரிதாப மரணம்!

முல்லைத்தீவு, ஜன. 27

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில், சுதந்திரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுதந்திரபுரம், வாகீசன் வீதியில் நெல் வெட்டும் இயந்திரத்தை ஏற்றிவந்த உழவு இயந்திரமும் சிறியரக பட்டா வாகனமும் மோதி விபத்திற்குள்ளாகின.

இந்த விபத்தில் பட்டா வாகனத்தை செலுத்தி வந்த வள்ளிபுனத்தை சேர்ந்த க.நவீன் (வயது-28) என்ற இளைஞன் படுகாயம் அடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதை உறுதி செய்தனர்.

நெல் வெட்டும் இயந்திரத்தை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம், போதிய பாதுகாப்பில்லாமல் பயணித்தமை தெரிய வந்தது. உழவு இயந்திரத்தின் அளவை விட நெல் வெட்டும் இயந்திரத்தின் பாகங்கள் பெரிதாக இருந்தன. உழவு இயந்திரத்தின் முன்பக்க மின்குமிழ் ஒன்று செயலிழந்திருந்துள்ளது. இதனால் எதிரே வருபவர்களுக்கு உழவு இயந்திரத்தின் பின்னால் ஏற்றப்பட்ட நெல் வெட்டும் இயந்திரத்தின் அளவு தெரிய வாய்ப்பில்லையென குறிப்பிடப்பட்டுள்ளது.

உழவு இயந்திர சாரதி புதுக்குடியிருப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# 11 முக்கிய சந்தைகளில் ரூ. 1.5 பில்லியன் செலவில் சுற்றுலா ஊக்குவிப்பு பிரசாரம்!

கொழும்பு, ஜன. 27

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகம் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் 11 முக்கிய சந்தைகளில் 1.5 பில்லியன் ரூபாய் செலவில் சுற்றுலா ஊக்குவிப்பு பிரசாரத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அதன் தலைவர் சாலக கஜபாகு தெரிவித்துள்ளார்.

தமது இலக்கு சந்தைகளில் இந்தியா, சீனா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மன், தென் கொரியா, ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் ஸ்கண்டிநேவிய ஆகிய நாடுகள் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இந்த ஆக்கப்பூர்வமான பணிகளுக்கான விளம்பர நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், டிஜிட்டல் மற்றும் மக்கள் தொடர்பு பணிகளுக்காக விலை மனு கோரப்பட்டுள்ளதாகவும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகத்தின் தலைவர் கூறியுள்ளார்.

சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு ஈர்க்கும் நோக்கில் காணொளிகளை உருவாக்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிறுவனம் உட்பட சமூக ஊடக செல்வாக்கு செலுத்துபவர்களுடன் இலங்கை இணைந்து செயல்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த காணொளிகள் மெண்டரின் உட்பட 18 வெவ்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்படவுள்ளதாகவும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இந்த ஆண்டில் 2.3 மில்லியன் சுற்றுலா பயணிகளின் வருகையை இலக்காக கொண்டுள்ளது. எனினும், 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை எதிர்பார்க்க முடியும் என சுற்றுலாத்துறை அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (அ)

# கோயில்புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்துக்கு குடிதண்ணீர்

வவுனியா, ஜன. 27

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பின்தங்கிய பாடசாலையான கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்தின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு நீண்டகாலத்துக்குப் பின்னர் தீர்வு காணும் வகையில் குடிதண்ணீர் தாங்கி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா, கோயில்புளியங்குளம் மஹா விஷ்ணு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெ.மயூர குருக்களின் நிதிப் பங்களிப்பில் வவுனியா ஊடகவியலாளர்களால் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் தாங்கி பாடசாலை அதிபர் முன்னிலையில் நேற்று முன் தினம் திறந்துவிடப்பட்டது.

இதன்போது, அதிதிகள் இந்த குடிதண்ணீர் தாங்கியை திறந்துவைத்தது டன், பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்தனர்.

அதனை தொடர்ந்து, அதிதிகளால் மாணவர்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டது. அத்தோடு, இந்நிகழ்வின் நினைவாக மர நடுகையும் இடம்பெற்றது.

குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் குடிநீரின்றி பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக கடந்த 5 வருடங்களுக்கு மேலாக பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலை சமூக கத்தினர் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

அதனை தொடர்ந்து, அதிபரின் வேண்டுகோளுக் கிணங்க வவுனியா ஊடகவியலாளர்கள் புலம்பெயர் தேசத்தில் தற்போது வசிக்கும் வவுனியா, கோயில்புளியங்குளம் மஹா விஷ்ணு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெ.மயூர குருக்களிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய, அவரால் வழங்கப்பட்ட நிதியின் மூலம் மோட்டருடன் கூடிய



குழாய் கிணறு நிர்மாணிக்கப்பட்டு, குடிதண்ணீர் தாங்கியும் நிறுவப்பட்டது. (அ)

# ஏற்கனவே டெங்கு நோயால் பாதிக்கப்பட்டோர் அவதானம்!

## வைத்தியர் யமுனாநந்தா எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

**ஏற்கனவே டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மீளவும் காய்ச்சல் ஏற்படும்போது மிகவும் அவதானமாக செயல்படவேண்டும்என யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் யமுனானந்தா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் டெங்கு நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். போதனா வைத்தியசாலையில் இன்றைய நிலையில் 86 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

கடந்த சில வாரங்களாக டெங்கு நோயாளர்களின் தொகை 150 தொடக்கம் 200 வரை இருந்தது. கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் 314 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள்.

இந்த வருடத்தில் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 1450 பேர் டெங்கு நோய்க்கு சிகிச்சை பெற்றிருக்கின்றார்கள். எனவே கடந்த வருடத்தை விட 500 வீதம் அதிகரித்துள்ளது.

பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும். அத்தோடு டெங்கு தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் ஆலய திருவிழாக்கள் ஆரம்பமாகி இடம்பெறுகின்றன. எனவே மாலை நேரங்களில் ஆலயத்துக்குச் செல்லும்போது அச்சூழலில் டெங்கு நோய் பரப்பக்கூடிய நுளம்புகளின் தாக்கத்துக்கு உள்ளாகலாம். எனவே அடுத்த ஒரு மாதத்திற்கு ஆலயச் சுற்றாடலை மிகவும் அவதானமாக வைத்திருக்க வேண்டும்.

அதேபோல எதிர்வரும் வாரத்தில் பாடசாலைகள் மீள திறக்கப்படவுள்ளன எனவே பாடசாலை சுற்றாடலையும் மிகவும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்

இந்த இரண்டு விழிப்புணர்வுகளும் தற்போதைய சூழ்நிலையில் தேவை ஏனெனில் டெங்கு நோயினை கட்டுப்படுத்துவது முக்கியமாகும்.

ஏனெனில் கடந்த வருடம் தை மாதத்தில் பத்துக்கு மேற்பட்ட நோயாளர்கள் மாத்திரம் தான் தினமும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்கள். ஆனால் இந்த வருடம் 100 இற்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று தற்போது 86 ஆக குறைவடைந்துள்ளது.

எனவே விழிப்புணர்வை மேற்கொள்வதன் மூலமே இதனை குறைக்கலாம்.

டெங்கு நோய் தொற்றுக்குள்ளாகுவோர் உடனடியாக தங்களை மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தவேண்டும். ஓய்வு எடுத்தல் வேண்டும். கடினமான வேலை செய்யக்கூடாது.

குறிப்பாக முன்னைய காலங்களில் சிறுவர்கள் பாடசாலை மாணவர்களுக்கு தான் டெங்கு நோய் பாதிப்புஏற்பட்டது.

ஆனால் தற்போது அதிகளவிளான நோயாளர்கள் குடும்ப தலைவர்கள் தான் இந்த டெங்கு நோயினால் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஏற்கனவே டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மீளவும் காய்ச்சல் ஏற்படும்போது மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். அவர்களுக்கு டெங்கு நோயின் பாதிப்பு இரண்டாவது தடவை, மூன்றாவது தடவை வரும்போது அதிகமாக ஏற்படலாம். அதேபோல அவர்களின் உணவு பழக்கங்கள் மிக முக்கியமானது. ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை அவர்கள் கைக்கொள்ள வேண்டும் - என்றார். (அ)

# பொலிஸ் நிலையம் சென்ற இளைஞன்மீது வாள் வெட்டு

யாழ்ப்பாணம், ஜன. 27

கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்த இளைஞனை வீதியில் வழிமறித்து வன்முறை கும்பல் வாள் வெட்டு தாக்குதலை நடத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் - வடமராட்சி பகுதியை சேர்ந்த ஜெயக்கொடி கார்திபன் (வயது 30) எனும் இளைஞனே தாக்குதலுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள், ஐஸ் கிறீம் வாங்குவது போல பாசாங்கு செய்து, இளைஞனின் உடைமையில் இருந்த ஐஸ் கிறீம் விற்பனை பணம், மற்றும் கைபேசி என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்று இருந்தனர்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இளைஞர் முறைப்பாடு செய்த பின்னர் தனது வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தவேளை, அல்வாய் பகுதியில் இளைஞனை வழிமறித்த கும்பல் ஒன்று, வாள்வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளது.

வாள் வெட்டுக்கு இலக்கான இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் , நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# பெலியத்தை கொலை சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த இருவர் கைது!

கொழும்பு, ஜன. 27

பெலியத்தையில் ஐந்து பேரைக் கொலை செய்வதற்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்ததாக சந்தேகிக்கப்படும் மேலும் இரு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதுர்துவ பிரதேசத்தில் வைத்து காலி மாகல்ல பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய நபரும், கதுருவ பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுடைய தொழிலாளி ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி, வஞ்சாவல என்ற இடத்தில் விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, அவர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளையராஜாவின் மகளின் பூதவுடல் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டது

கொழும்பு, ஜன. 27

மறைந்த பின்னணிப் பாடகியான பவதாரிணியின் பூதவுடல் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் யு.எல். 127 என்ற விமானத்தினூடாக சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இசைஞானி இளையராஜாவின் மகளும், மறைந்த பின்னணி பாடகியுமான பவதாரணியின் பூதவுடலை பார்ப்பதற்காக அவரின் சகோதரரும் பிரபல இசையமைப்பாளருமான யுவன் சங்கர் ராஜா, இயக்குநர் வெங்கட் பிரபு மற்றும் தமிழ் திரைப் பிரபலங்கள் நேற்று அதிகாலை இலங்கை வந்தனர். (அ)

# மருத்துவ சேவையில் புதிய பல திட்டங்கள்

## வைத்தியர்களின் பங்களிப்பும் அவசியம்

கொழும்பு, ஜன. 27

நாட்டில் மருத்துவ சேவையின் எதிர்காலத்திற்காக அனைத்து மருத்துவ சங்கங்களும் இணைந்து புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்துள்ளன.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், விசேட வைத்திய அதிகாரிகள் சங்கம், இலங்கை மருத்துவ நிறுவனம் உட்பட அனைத்துத் துறைகளின் வைத்தியர்களின் பங்களிப்புடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றதாக, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“இந்த நாட்டில் இலவச சுகாதார சேவையை எதிர்காலத்தில், நாடு சுமையாக உணராத வகையில் இந்த நாட்டு மக்களுக்கு தரமான சேவைகளை வழங்கக்கூடிய ஒரு அமைப்பு பற்றி பேச வேண்டும்.

மக்களுக்கு அதிக சேவைகளை எவ்வாறு வழங்க முடியும்? மருந்துகளுக்கு செலவழிக்கும் பணத்திற்கு நியாயம் செய்வோம், குறைந்த செலவில் இந்தச் சேவையை வழங்குவோம். அதை எப்படிச் செய்வது என்று விவாதித்தோம்.

இந்த நாட்டில் இலவச சுகாதார சேவையை புதிய அத்தியாயத்திற்கு கொண்டு செல்வதற்கான ஒப்பந்தத்தை எட்டினோம்.” என தெரிவித்தார்.

# மன்னார் தீவை பாதுகாக்குமாறு வலியுறுத்தி நேற்று போராட்டம்!

மன்னார், ஜன. 27

மன்னாரில் இடம்பெற்று வருகின்ற சுற்றுச்சூழலை அழிக்கும் சட்ட விரோத செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மக்கள் நலமாக வாழ நாட்டின் வளங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பவற்றை வலியுறுத்தி மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை காலை மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

அத்தோடு, மன்னாரில் இடம்பெற்று வரும் பாரிய களிமண் அகழ்வு மற்றும் உயர் மின்வலு காற்றாடிகள் அமைக்கும் திட்டங்கள் காரணமாக மன்னார் தீவு மக்களது இருப்பில் பிரச்சினை, வாழ்வாதார பாதிப்பு, சட்டவிரோத காணி அபகரிப்பு, மரங்கள் அழிப்பு போன்றவற்றால் மன்னார் தீவு கடலுக்குள் அமிழப் போவதாகவும் இதன்போது போராட்டக்காரர்கள் எடுத்துரைத்தனர்.

மன்னார் பிரதான பாலத்தில் தொடங்கிய இந்த போராட்டம், சில மணிநேரங்கள் மாவட்ட செயலகத்தின் முன்னாலும் இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் “மனித உயிர்களை காவு கொள்ளுகின்ற மண் அகழ்வு, காற்றாலை நடவடிக்கைக்கு காணிகளை விற்காதே“, ‘மண் அகழ்வை நிறுத்தாவிடில் நன்னீர் மாசடைவதுடன் உப்புத் தன்மையும் அதிகரிக்கும்’,






‘மன்னாரின் சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைவோம்’, ‘கனியவள மண் அகழ்வு மன்னார் மக்களின் வாழ்வாரத்தை அழித்து விடும்’ போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருந்த பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பினர்.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் எற்பாட்டில் நடைபெற்ற இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் மதத் தலைவர்கள், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு தெற்கு முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வடக்கு, தெற்கு முக்கியஸ்தர்கள், இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மதத்தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் என பலர் உரையாற்றினர்.

அதைத் தொடர்ந்து, மன்னார் மாவட்ட செயலகத்துக்கு சென்ற போராட்டக்காரர்கள், அங்கு மன்னார் மேலதிக அரசாங்க அதிபரிடம் (காணி) ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு மகஜர் ஒன்றை கையளித்தனர். (அ)




# தமிழர் மரபுப்படி புதிர் எடுத்தல் நிகழ்வு மட்டக்களப்பில் நடந்தது

மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளில் தமிழர் மரபுப்படி புதிர் எடுத்தல் நிகழ்வு ஆலயங்கள் தோறும் நேற்று முன் தினம் நடைபெற்றது. தைப்பூச திருநாளாகிய நேற்று முன்தினம் இதுபோன்றதொரு நிகழ்வொன்று வந்தாறு மூலையிலும் நடைபெற்றது.

குறித்த நிகழ்வு ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயம், ஸ்ரீ நிர்முகப் பிள்ளையார் ஆலயம், ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினர்களின் ஏற்பாட்டில் டாக்டர் இ.ஸ்ரீநாத் அவர்களின் உபயத்துடன் நிகழ்வுகள் யாவும் நடைபெற்றது. பெரும் போகத்திற்கான வேளாண்மை அறுவடை செய்யப்பட்டு வயற்கரை விநாயகர் ஆலயத்தில் சமய கிரியைகளுடன் அதிகாலை 8.06 மணிக்கு சுப முகூர்த்த வேளையில் புதிர் எடுக்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து வீதி ஊர்வலமாக நாதஸ்வர மேள தாள இசையுடன் ஸ்ரீ நிர்முகப் பிள்ளையார், ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலயம், ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயம்,போன்ற ஆலயங்களை தரிசித்து அவ்வாலயங்களில் உள்ள மண்டபங்களில் அறுவடை செய்யப்பட்ட நெல் மற்றும் நெற் கதிர்கள் என்பன குவிக்கப்பட்டு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று மக்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட்டன. (அ)

# சக்தி மிக்க குண்டுகள் மட்டக்களப்பில் மீட்பு



மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்ககளப்பு - களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிருப்பு பாலத்தின் கீழிருந்து இரண்டு சக்தி வாய்ந்த மோட்டார் குண்டுகளை மீண்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் மட்டக்களப்பு வாவியின் பட்டிருப்புப் பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் இந்த இரு குண்டுகளும் அகப்பட்டுள்ளன.

அதனை அவதானித்த குறித்த மீனவர் களுவாஞ்சிகுடி பொலஸாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இரண்டு குண்டுகளையும் மீண்டுள்ளனர். நீதி மன்ற உத்தரவைப் பெற்று குண்டு செயலிழக்கும் பிரிவினரைக் கொண்டு இக்குண்டுகள் செயலிழக்கச் செய்ய உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# விழிப்புணர்வும் பரிசோதனையும்



கல்முனை, ஜன. 27

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான வாய்ச் சுகாதாரம் பேணுவோம் எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு, பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் ஏ. ஜி.எம். றிசாத் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் பல் வைத்திய நிபுணர் டொக்டர் சுர்பா றிப்தி , பொதுச் சுகாதார பரிசோதகர் .எம். ஜூனைட் ,மற்றும் பாடசாலை சுகாதாரப் பாட ஆசிரியை திருமதி வீ.யோகநாதன் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு வாய்சுகாதாரம் பற்றி விளக்கமளித்தனர்.

அத்துடன் மாணவர்களின் பற்சுகாதாரங்களும் பரிசோதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்தும் நோக்குடன் கூட்டம்



அம்பாறை, ஜன. 27

கல்முனை கல்வி வலய மாவடிப்பள்ளி அல்-அஸ்ரப் மகா வித்தியாலயத்திலிருந்து இவ்வருடம் க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் அடைவு மட்டத்தினை மேம்படுத்தும் நோக்குடனான கூட்டம் புதன் கிழமை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையிலான கல்வி அதிகாரிகள் குழுவினரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

விசேட பாடசாலைத் தரிசிப்பில் ஈடுபட்டு பலதரப்பட்ட விடயங்களை அவதானித்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கிய வலயக் கல்வி பணிமனை அதிகாரிகள் பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்திக்காக துரிதமாக இரண்டு மில்லின் ரூபாவினை பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்துள்ளனர்.

மேலும் கடந்த 2023 டிசம்பரில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.சஹுதுல் நஜீமின் சிபாரிசின் அடிப்படையில் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் கல்முனை வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், பாடசாலை அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)




# அம்பாறை மீனவர்களின் மாநாடு

அம்பாறை, ஜன. 27

மீன்பிடி தொழில் அனர்த்தத்தில் தீர்விற்கான மீனவர் பலத்தைக் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளின் கீழ் அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கான மாநாடு நேற்று முன்தினம் புதன்கிழமை சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த இந்த மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் தேசிய தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவருமான கே.டி லால் காந்த மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தலைவருமான நிஹால் கலபதி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளருமான ரத்ன கமகே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

# வீரமுனை வழிபாட்டுப் பிள்ளையார் ஆலய தைப்பூச புதிர் எடுத்தல் பாரம்பரிய நிகழ்வு!

காரைதீவு, ஜன. 27

தைப்பூச திருநன்னாளில் பாரம்பரிய புதிர் எடுத்தல் நிகழ்வு வீரமுனை ஸ்ரீ வழிபாட்டுப்பிள்ளையார் ஆலயத்தினால் கடந்த வியாழக் கிழமை சிறப்பாக நடைபெற்றது.

வீரமுனை கிராமத்தில் தமிழ் பாரம்பரிய நிகழ்வான வயல் வெளியில் நெற்கதிர் அறுத்தல் நிகழ்வானது ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கிஷோவேந்தன் சர்மா மற்றும் சிவஸ்ரீ முரளிதரன் ஐயா தலைமையில் ஆலய பரி பாலனசபையினர் ஒத்துழைப்புடன் வீரச்சோலை வயல் வெளிக்குச் சென்று இனிதே நடைபெற்றது. (அ)



# மட்டு. நாவலடியில் இளைஞரின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்களப்பு நாவலடி பிரதேசத்தில் 21 வயது இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு குமாரபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த இவர், நாவலடியில் திருமணம் செய்து வசித்து வந்தார். அவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ)

# செங்கடலில் நடத்தப்படும் தாக்குதல்கள் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும்

## எச்சரிக்கை விடுத்த ஐ.நா. பொதுச் சபை தலைவர்

நியூயோர்க், ஜன. 27

செங்கடலில் நடத்தப்படும் தாக்குதல்கள் கவலையளிக்கின் றன. இத்தாக்குதல் தொடர்வது, மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கக் கூடும் என ஐ.நா. பொதுச் சபை தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ் எச்சத்துள்ளர்.

ஐ.நா. பொதுச் சபையின் 78ஆவது அமர்வின் தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ், ஐந்து நாள் அரசு பயணமாக இந்தியாவுக்கு சென்றார்.

இந்நிலையில் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலே ஐ.நா. பொதுச்



சபை தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

செங்கடலில் தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதல்கள் கவலையளிக்கின்றன.

இத்தாக்குதல் தொடர்ந்தால் மூன்றாம் உலகப்போருக்கு வழி வகுக்கக் கூடும்.

செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடங்கிய தாக்குதலுக்கு மூன்றாம் தரப்பினர் உதவுவது போலுள்ளது.

எனவே சூழல் மிகவும் மோசமாக மாறி வருகிறது. இதே போல் காஸா பிரச் னைக்கு அமைதி வழியே தீர்வு. இஸ்ரேல் - பலஸ்தீனம் என இரண்டும் தனிநாடுகளாக செயல்பட வேண்டும் - என்றார். (அ)



# சொந்த நாட்டு பிரஜைகளையே சுட்டு வீழ்த்தியதா உக்ரைன்?

கீவ், ஜன. 27

65 உக்ரைனிய போர்க் கைதிகள், ஆறு ரஷ்ய பணியா ளர்கள் மற்றும் மூன்று துணைக் காவலர்களுடன் கிய்வ் -76 விமானம் உக்ரைனின் எல்லைக்கு அருகில் உள்ள பெல்கோரோட் பகுதியில் கடந்த புதன்கிழமை வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

கைதிகள் பரிமாற்றத்திற்காக உக்ரைனியர்கள் விமானத்தில் அனுப்பப்பட்டதாகவும், விபத்தின் பின்னர் அதில் பயணித்த எவரும் உயிர் பிழைக்கவில்லை என்றும் மொஸ்கோ கூறியது.

எனினும் குறித்த விமானத்தை உக்ரைன் வேண்டுமென்றே சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

எனினும், விமானத்தை சுட்டு வீழ்த்தியதை உக்ரைன் நேரடியாக உறுதிப்படுத்தவில்லை, அதேநேரம் மொஸ்கோவின் குற்றச்சாட்டுக்களையும் உக்ரைன் சவால் செய்துள்ளது.

இந் நிலையில், விமான விபத்து தொடர்பான சர்வதேச விசாரணைக்கு உக்ரைன் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

முந்தைய சந்தர்ப்பங்களை போல் பாதுகாப்பான வான் வெளியை உறுதி செய்ய எமக்கு ரஷ்யா கூறவில்லை என உக்ரைனின் இராணுவ உளவுத்துறை தெரிவித்தது.

உக்ரைனின் இராணுவ உளவுத்துறை கருத்துக்கள் உக்ரைன் இராணுவ போக்குவரத்து விமானத்தை சுட்டு வீழ்த்தியதை மறைமுகமாக ஒப்புக் கொண்டதாகக் கருதப்பட்டது.

இருப்பினும் விமானத்தில் இருந்தவர்கள் யார் என்பது பற்றிய நம்பகமான தகவல் இல்லை என்பதை அது வலியுறுத்தியது.

மற்றும் இந்த சம்பவம் "ரஷ்யாவின் திட்டமிட்ட மற்றும் வேண்டுமென்றே நடவடிக்கைகள்" சம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும் அது சந்தேகத்தை அது எழுப்பியது.

இது போர்க் கைதிகளின் உயிர்கள் மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குவதை நோக்கமாகக் கொண்ட ரஷ்யாவின் திட்டமிட்ட நடவடிக்கையாக இருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டியது.

எனினும் விமானம் உக்ரைன் ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டதா அல்லது சில பேரழிவு தொழில்நுட்பக் கோளாறால் பாதிக்கப்பட்டதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. (அ)

# விடுமுறைக்காக அவுஸ்திரேலியா சென்ற நான்கு இந்தியர்கள் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

மெல்பேர்ண், ஜன. 27

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலா சென்றிருந்த நால்வர் பீலிப் தீவு கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த நால்வரும் இந்தியர்கள் என இந்திய தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவின்- விக்டோரியாவில் உள்ள பீலிப் தீவில் நீராடிக்கொண்டிருந்த நால்வர் நேற்று மாலை முன் தினம் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இதனையடுத்து தீவில் உள்ள கடற்கரைக்கு அவசர சேவை பிரிவினர் அழைக்கப்பட்டனர்.

அலையில் அடித்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கியவர்கள் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தனர். அவர்களை மீட்டு அதிகாரிகள் முதலுதவி அளித்



தாலும் சம்பவ இடத்திலேயே மூவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 20 இயதுடைய இரு யுவதிகளும், 40 வயதுடைய ஆண் ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

முதலுதவிக்கு பின் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த மேலும் ஒரு பெண் விமானம் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார். எனினும், சிகிச்சை பலனின்றி குறித்த பெண்ணும் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர்கள் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர்கள் எனவும், விடுமுறையை கழிப்பதற்காக அவுஸ்திரேலியாவுக்கு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# எதிர்பாராத வளர்ச்சி நிலையை காட்டும் அமெ. பொருளாதாரம்!

## ஆச்சரியத்தில் ஆய்வாளர்கள்

நியூயோர்க், ஜன. 27

அமெரிக்க பொருளாதாரம் கடந்த ஆண்டின் இறுதி காலப் பகுதியில் எதிர்பார்த்ததை விட வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, அமெரிக்க பொருளாதாரம் கடந்த டிசம்பர் மாதம் வரையிலான மூன்று மாதகாலப்பகுதியில் 3.3 வீதம் விரிவடைந்துள்ளதாக வர்த்தகத் துறை தெரிவித்துள்ளது.

ஆய்வாளர்கள் 2 வீத அதிகரிப்பையே எதிர்பார்த்த நிலையில் இந்த அதிகரிப்பானது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 1.9 வீதமாக காணப்பட்ட அமெரிக்க பொருளாதார வளர்ச்சியானது 2023 ஆம் ஆண்டில் 2.5 வீதமாக வளர்ச்சிய டைந்துள்ளது.

அமெரிக்க மத்திய வங்கி கடன் வாங்கும் செலவுகளை கட்டுப்படுத்தி, பணவீக்கத்தை மேட்டுப்படுத்தியமையால் இவ்வாறு எதிர்பாராத பொருளாதார மீள்தன்மை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2024 ஆம் ஆண்டில் அமெரிக்க பொருளாதார வளர்ச்சி வேகம் சீராக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதாரம் ஆரோக்கியமான தன்மையில் இருப்பதாக மக்களை நம்பவைப்பதற்கு போராடிவரும் நிலையில், இந்த தகவலானது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு வரப்பிரசாதமாக பார்க்கப்படுகிறது.

# நைதரசன் வாயுவை பயன்படுத்தி நேற்று அமெரிக்காவில் முதல் மரண தண்டனை!

நியூயோர்க், ஜன. 27

அமெரிக்காவில் நைதரசன் வாயுவைப் பயன்படுத்தி நிகழ்த்தப்பட்ட முதலாவது மரண தண்டனை அலபாமா மாகாணத்தில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

கென்னத் ஸ்மித், 1988 ஆம் ஆண்டு வாடகை கொலையாளியாக செயற்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டார். அவருக்கு நவம்பர் 2022 இல் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட முயற்சிக்கப்பட்ட போதும், அவர் உயிர் தப்பிய அசாதாரண கைதி ஆவார். அலபாமா அதிகாரிகள் நரம்பு ஊசியை சரியாகச் செருக பல மணிநேரம் போராடியதால் அவருக்கு மரண ஊசி செலுத்தப்படுவது நிறுத்தப்பட்டது.

அலபாமா தனது சமீபத்திய நடைமுறையை "மனிதகுலம் அறிந்த மிகக் குறைந்த வலி மற்றும் மனிதாபிமான மரணதண்டனை" என்று விவரித்தார்.

நைதரசன் வாயுவை பயன்படுத்தும் மரண தண்டனையில் கென்னத் ஸ்மித் ஓரிரு நிமிடங்களில் சுயநினைவை இழந்து, சிறிது நேரத்தில் இறந்துவிடு



வார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நைதரசன் சயனைட் போன்ற கொடிய வாயுக்கள் மரண தண்டனைக்கு முன்னர் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், மரண தண்டனையில் மூச்சுத் திணறலைத் தூண்டுவதற்கு மந்த வாயுவைப் பயன்படுத்திய முதல் நிகழ்வாக இது கருதப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை நிபுணர்கள் உட்பட மரண தண்டனையை விமர்சிப்பவர்கள், இந்த முறை மனித பரிசோதனைக்கு சமம் என்றும், நபரை கொல்வதற்கு பதிலாக காயப்படுத்தலாம் அல்லது சித்திரவதையான மரணத்திற்கு வழிவகுக்கும் என்றும் வாதிடுகின்றனர்.

ஸ்மித்தின் ஆன்மீக ஆலோசகர் ரெவரெண்ட் ஜெஃப் ஹூட் வருத்தத்தை வெளிப் படுத்தினார். மரண தண்டனையின் போது உடனிருந்த ஹூட், நைட்ரஜன் மூச்சுத்திணறலுக்கு ஆளாக நேரிடும் "சாத்தியமற்ற" ஆபத்தை ஒப்புக்கொண்டு கையெழுத்திட வேண்டியிருந்தது.

சித்திரவதை அல்லது மரண தண்டனைக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மீதான ஐரோப்பிய தடையை கடைப்பிடிக்கும் மருந்து நிறுவனங்கள் அவற்றின் விநியோகத்தை தடை செய்வதால் மரண தண்டனையை அமல்படுத்தும் அமெரிக்காவில் உள்ள மாநிலங்கள் கொடிய ஊசி மருந்துகளை வாங்குவதில் சவால்களை எதிர்கொள்கின்றன.

ஒக்லஹோமா மற்றும் மிசிசிப்பி சட்டமியற்றுபவர்கள் நைட்ரஜன் - மூச்சுத்திணறல் செயல்படுத்தல் நெறிமுறைகளை ஆதரித்துள்ளனர். ஆனால் இன்னும் அவற்றை செயல்படுத்தவில்லை.

கென்னத் ஸ்மித், போதகரின் மனைவி எலிசபெத் சென்னட்டைக் கொலை செய்த குற்றத்திற்காக, 12 ஜூரிகளில் 11 பேரிடமிருந்து மரண தண்டனை பரிந்துரையைப் பெற்றார். (அ)


DAN news
இன்று முதல்
மேல் மாகாணம் எங்கும்
DAN நியூஸ்
24X7
இன்று முதல்
UHF-22
அலைவரிசையில்
முதலாவது இருமொழி சனல்

## இரண்டு...

கட்டடங்களும், மட்டக்களப்பில் அமைந்துள்ள பழைய மருத்துவமனை கட்டடமும் இதற்காக பயன்படுத்தப்பட வுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## பெண்...

அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு தனி யார் துறையில் இலஞ்சம் வாங்குவதற்கு எதிராக நடத்தப்பட்ட முதல் நடவடிக்கை இதுவாகும்.

2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டமானது, தனியார் துறையில் இலஞ் சம் வழங்குவதைத் தடுக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. முன்னர் அரச துறையில் இலஞ்சம் அல்லது ஊழலுக்கு எதிராக மட்டுமே ஆணைக்குழு நடவடிக்கையெடுத்தது.

இதன்படி, ஆணைக்குழுவின் அனுமதியு டன் அதிகாரிகளால் தனி யார் துறையில் இலஞ்ச ஊழல் தொடர்பான முதலாவது சுற்றிவளைப்பு அநுராதபுரத்தில் நேற்று நடத்தப்பட்டது.

இந்த சுற்றிவளைப்பில் பெண் ஊழியரான இளம் யுவதியிடம் பாலியல் இலஞ்சம் கேட்டாரென தனியார் ஹோட்டல் மனித வள மேலாளராகவும், கணக்காள ராகவும் செயல்பட்டவர் கைது செய்யப் பட்டார். ஹோட்டல் ஒன்றின் அறையில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

கைதானவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எம்முடன்...

வென்றெடுப்பதற்காக விடுதலைப் புலிகள் ஆயுதப் போராளிகளாக செயல்பட்டவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக வழி முறையில் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்திருந்தது. இருவரும் ஒருவருக் கொருவர் அனுசரணையுடன் செயல்பட்டு வந்தார்கள்.

சம்பந்தனால் தலைமையேற்று நடத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நிலவிய பல்வேறு முரண்பாடுகள் காரணமாக அதில் இணைந்திருந்த பல கட்சிகள் - தனிநபர்கள் வெளியேறினர். அதுமாத்திரமல்லாமல், இறுதியில் 2023ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதற்காக கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார்கள். இதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயலிழந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 22 வருட காலமாக தமிழ் மக்களுக்காகப் போராடும் ஓர் அரசியல் கட்சியாக தன்னை நிறுவனப்படுத்திக்கொள்ளாமல், தேர்தல் காலங்களில் கூட்டாகவும் பின்னர் தமிழ் அரசுக் கட்சியாக முடிவெடுத்துச் செயல்படுவதுமே இன்றுவரை தொடர்கின்றது. இதன் காரணமாகவே இடைப்பட்ட காலங்களில் பல கட்சிகளும் அதிலிருந்து வெளியேறின.

இந்த நிலையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியோரை ஒன்றிணைத்து 2009ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புதிய புதிய அமைப்புகள் தொடர்பாக சிந்திப்பதை விடுத்து ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஐக்கிய முன்னணியில் தமிழ் அரசுக் கட்சியும் தமிழ்த் தேசியப் பரப்பில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஏனைய கட்சிகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்று விரும்புகிறோம் - என்றுள்ளது. (ஐ)

# அரசு விரும்பாத பதிவை நீங்கள் பதிவிட்டால் பழிவாங்கப்படலாம்!

## ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி

கொழும்பு, ஜன. 27

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் முதலில் வர்த்தமானியில் வெளியான வேளை சட்டமா அதிபர் திணைக்களம் அதனை ஆராயவில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதலில் இந்த சட்டமூலம் வர்த்தமானியில் வெளியானது. நாங்கள் இதற்கு எதிராக உயர்நீதிமன்றம் சென்றோம். சட்டமா அதிபர் திணைக்களம் அந்த சட்டமூலத்தில் 30 திருத்தங்களை முன்வைப்பதாக தெரிவித்தது என அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டால் சட்டமா அதிபர் திணைக்களம் அதனை ஆராய்ந்து அது அரசமைப்புக்கு உட்பட்டதா என்பதை தெரிவிக்கவேண்டும். ஆனால், அவர்கள் அதனை தெரிவிக்காததால் அவர்கள் இந்த சட்ட மூலத்தை ஆராயவில்லை போல தோன்றுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலத்தை ஊடக அமைச்சு தயாரித்தது நீதியமைச்சு சமர்ப்பித்தது என அரசாங்க வட்டாரங்கள் எனக்கு தெரிவித்தன கடந்தகாலங்களில் பல தடவை அமைச்சரவையால் அனும திக்கப்பட்ட சட்டமூலங்களை திருத்துவதற்கு அரசாங்கம் நீதிமன்றில் இணங்கியிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றம் இரண்டு நாட்களுக்கு மாத்திரமே நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்து விவாதித்தது அரசாங்கம் அதனை அவசர அவசரமாக நிறைவேற்ற விரும்பியது போல தென்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ள ஜயம்பதி விக்கிரமரட்ண இந்த சட்டம் மக்களின் கருத்து சுதந்திரத்தின் மீது பெரும் தாக்கத்தை செலுத்தும் இதனை பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முகநூலில் விருப்பம் தெரிவிப்பது கூட கருத்துதெரிவிப்பது தான் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தில் குற்றம் என தெரிவிக்கப்பட்டுள்ள விடயத்தினை ஆராயும்போது அரசாங்கம் விரும்பாத ஒரு பதிவை நீங்கள் விரும்பினால் அதற்கு நீங்கள் பழிவாங்கப்படலாம் எனவும் ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

பல கருத்துப் பரிமாற்றங்கள் இணையத்திலேயே இடம்பெறுகின்றன தங்கள் எண்ணங்களை சொல்வதற்கு பகிர்ந்து கொள்வதற்கு மக்கள் சமூக ஊடகங்களையே பயன்படுத்துகின்றனர் என தெரிவித்துள்ள அவர் இரண்டு தேர்தல்கள் இடம்பெறவுள்ளன அதிகளவான பிரசாரங்கள் இணையங்கள் விவாதங்கள் இணையத்திலேயே இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

## இலங்கை...

என்றும் அறிய வருகின்றது. இதேநேரம், திருகோணமலை அல்லது அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவ ருக்கு பொதுச் செயலர் பதவியை வழங்கும்மாறும் அழுத்தம் பிரயோகிக் ப்படுகின் றது.

பொதுச் செயலர் பதவி நியமனத்தில் தீர்வு எட்டப்படாதவிடத்தில் பொதுச் சபைக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத் தப்படும்.

இதேநேரம், இம்முறை கட்சியின் நிர்வாகக்குழு முழுமையாக மாற்றப் படும் என்று அறிய வருகின்றது. அத்து டன், திருமதி சசிகலா ரவிராஜூக்கும் கட்சியில் முக்கிய பதவி ஒன்றை அளிக் கத் தீர்மானிக்க ப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

## எதிரான...

கருத்துகளை ஒடுக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என்று மனுதாரர்களின் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இலங்கை நாடு, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என அடையாளப் படுத்தப்படுவதன் காரணமாக, மக்களை பாதுகாத்தல், அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் ஆகியன அரசமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அரசாங்கத்தின் தூரநோக்கற்ற செயல்பாடுகளுக்கு எதிராக குரலெழுப் பும் மக்களை ஒடுக்குவதற்கு இந்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில உட்பிரிவுகள், பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூல மாக மாத்திரமின்றி, சர்வஜன வாக் கெடுப்பின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும். மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது நீதிமன்றத்தி டமே காணப்படுவதாகவும் சட்டத் தரணிகள் கூறியிருந்தனர்.

மனுதாரர்களின் சார்பில், ஜனாதிபதி சட்டத்தரணிகளான எம். ஏ. சுமந்திரன், நய்ஜல் ஹெடி, சாலிய பீரிஸ் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி லக்ஷான் டயஸ், சட்டத்தரணி தனுக நந்தசிறி, சிரேஷ்ட சட்டத்தரணி ஷாந்த ஜயவர்தன உள்ளிட்டவர்கள் முன்னிலையாகினர்.

சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரில் புள்ளே உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர் முன்னிலை யாகியிருந்தனர். (ஐ)

# நிஷாந்தவின் வெற்றிடம்; தேர்தல் குழுவுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 27

புத்தளம் தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் மறைவை தொடர்ந்து 2024 ஜனவரி 25ஆம் திகதி முதல் ஒன்பதாவது பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவருக்கான வெற்றிடம் ஏற்பட்டிருப் பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் சார்பில் பாராளுமன்ற பதவி அணித் தலைமை அதிகாரியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற செயலாளர் நாயகம் சார்பில் இதனை அறியத் தருவதாக பிரதிச் செயலாளர் நாயகம் இந்தக் கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ் சாலையில் கந்தானை பகுதியில் வியாழக் கிழமை அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

சனத் நிஷாந்தவின் மறைவை யொட்டி ஏற்பட்டுள்ள பாராளுமன்ற வெற்றிடத்துக்கு 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பொது ஜன போட்டியிட்ட ஜெகத் பியங்கரவின் பெயர் தேர்தல் தெரிவத்தாட்சி பத்திரத் தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 300 கோடி ரூபாய் இலாபத்தை திறைசேரிக்கு வழங்கிய லிட்ரோ!

கொழும்பு, ஜன. 27

300 கோடி ரூபாய் இலாப வருமானத்தை திறைசேரிக்கு செலுத்தியுள்ளோம். பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருந்த லிட்ரோ நிறுவனம் தற்போது இலாபமடைந்துள்ளது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள லிட்ரோ நிறுவனத்தின் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் லிட்ரோ நிறுவனம் சிறீ லங்கா காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கு 150 கோடி ரூபாய் இலாப வருமானத்தை செலுத்தியுள்ளோம்.

தற்போது 150 கோடி ரூபாய் இலாப வருமானத்தை சிறீ லங்கா காப்புறுதி கூட்டுத்தாபனம் ஊடாக திறைச்சேரிக்கு செலுத்தியுள்ளோம்.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவராக பதவியேற்கும்போது நிறுவனம் பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருந்தது. முறையான முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றின் ஊடாக நிறுவனம் தற்போது இலாபமடைந்துள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் எரிவாயு சிலிண்டரின் பாதுகாப்புத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொது காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடியை முகாமைத்துவம் செய்து எரிவாயு சிலிண்டரின் விலையை ஸ்திரமான நிலையில் பேணுகிறோம். எரிவாயு விலை அதிகரிப்பால் நிறுவனத்துக்கு சொற்பளவிலான இலாபமே கிடைக்கப் பெறுகிறது - என்றார். (ஐ)

## நான்கு...

பிரிவினர் கோரிக்கைக்கு அமைவாக இந்த சிவப்புப் பிடியாணை பிறப்பிக்கப் பட்டது.

தென்னிலங்கையின் கள்ளலிய, கலகெடிஹேன பிரதேசங்களைச் சேர்ந்தவர்களான தற்போது அவுஸ்திரேலியா, சிரியாவில் வசிக்கும் நால்வருக்கே இந்த சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## யாழ்...

கடந்த 23ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் டெங்கு நோயை கட்டுப் படுத்துவது தொடர்பான கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக டெங்கு பரவும் சூழலை வைத்திருந்த யாழ். மாநகரம், திருநெல்வேலி பகுதிகளின் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தங்கள் இடங்களை துப்புரவு செய்யவேண்டும்.

இந்த செயல்பாட்டுக்கு ஒத்துழைக்காத - டெங்கு நுளம்பு பெருக்கக்கூடிய சூழலை வைத்திருக்கும் வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஐ)

## சனத்...

கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் பலியான சம்பவம் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

வாகனத்தை பாதுகாப்பு இன்றி செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான சாரதி காயங்களுக்கு உள்ளான நிலையில் ராகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வாக்குறுதி அரசியலால் பொருளாதாரம் பாதிப்பு

## நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு தயாராகுமாறு ஜனாதிபதி அழைப்பு



கொழும்பு, ஜன. 27

**வாக்குறுதி அரசியலால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

குறிப்பாக தேர்தலுக்கு தயாராகும் போது நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான விரிவான திட்டத்தை வகுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து அரசியல் கட்சிகளிடமும் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள இலங்கை சுங்கத் தலைமையகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை கூறினார்.

ஆண்டுதோறும் ஜனவரி 26 ஆம் திகதி அனுசரிக்கப்படும் சர்வதேச சுங்க தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் இந்த கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி,

சாத்தியமான மாற்று முன்மொழிவுகள் தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுவதற்கு ஒன்றிணையுமாறு அரசியல் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவிற்கு இந்த முக்கியமான உரையாடலுக்காக இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (அ)



# யாழ்.பல்கலைக்கழகத்தில் தேசிய பொங்கல் விழா!

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாண பல்கலைக்கழக அனைத்து பீட மாணவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழர் தேசிய பொங்கல் விழா நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழக அனைத்து பீட மாணவ ஒன்றியத் தலைவர் கே.துவாரகன் தலைமையில் இடம்பெற்றது.

பொங்கல் நிகழ்வைத் தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் கலை, பண்பாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், யாழ்ப்பாண பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவ ஒன்றிய மாணவர்கள், அனைத்து பீடங்களினதும் பீடாதிபதிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# புனர்வாழ்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டோரில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் உள்ளனர்!

கொழும்பு, ஜன. 27

கடந்த காலங்களில் புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்ட கைதிகளுக்கிடையில் போதைப்பொருள் கடத்தற்காரர்கள் சிலர் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

அவர்கள் அவ்வப்போது வன்முறைகளை தோற்றுவிக்கின்றமை அம்பலமாகியுள்ளதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி கூறினார்.

இந்த விடயம் தெரியவந்தநுள்ள நிலையில், கைதிகளுக்கிடையில் உள்ள போதைப்பொருள் கடத்தற்காரர்களை அடையாளங்கண்டு அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யுக்திய சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட போதைப்பொருளுக்கு அடிமையானர்கள் எனக் கூறப்படும் சுமார் 300 பேர் புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 22 முதல் 36 வயதுக் கிடைப்பட்ட சுமார் 100 பேர் அடங்குவதுடன், இவர்கள் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பல சந்தர்ப்பங்களில் மோதல்களை உருவாக்கியுள்ளதாகவும் இதனால் புனர்வாழ்வு நிலையத்தின் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

மேலும் போதைக்கு அடிமையான 36 வயதிற்கு மேற்பட்ட 200 பேர் கைது செய்யப்பட்டு, சேனபுர புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த வியாழன் இடம்பெற்ற மோதலில் தப்பிச் சென்ற 13 பேரைத் தேடி தொடர்ந்தும் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 34 கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புனர்வாழ்வு நிலையத்தில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலின் பின்னர் 47 கைதிகள் தப்பிச் சென்றனர். (அ)

# எனக்கு பின் வரும் பரம்பரையும் அரசியலில் துடிப்புடன் இறங்கும்

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஜன. 27

ராஜபக்ஷ குடும்பம் 98 வருடங்கள் இந்நாட்டில் அரசியலில் ஈடுபட்டுள்ளது. எனக்கு பின் வரும் அடுத்த பரம்பரையும் அரசியலில் துடிப்புடன் இறங்கி மக்களுக்கு சேவையாற்றும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டாறு தெரிவித்திருந்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

இன்று ஜனாதிபதி மகுடத்திற்காக பல தரப்பினர் முயற்சித்து வருகின்றனர். விவசாயிகள் முயற்சிக்கின்றனர், வியாபாரிகள் முயற்சிக்கின்றனர், ஊடக பிரதானிகள், முன்னாள் ஜனாதிபதிகளின் பிள்ளைகள் என பல தரப்பும் முயற்சிக்கின்றனர். ஆனால் நாம் யதார்த்த நிலையினை புரிந்து கொள்ள வேண்டும்.

பிரதான கட்சிகள் இன்றி ஏனைய கட்சிகளுக்கு அதிகாரம் வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிப்பது மக்கள். அவர்கள் எங்கள் வீடுகளுக்கு தீ வைத்தவர்களாக இருக்கட்டும், இந்நாட்டை அழித்தவர்களாக இருக்கட்டும் அதற்கு மக்களுக்கான உரிமைகள் உண்டு.

ஆதனால் நாம் ஒருபோதும் குறிப்பிட்ட சிலருக்கு பயந்து அரசியல் தீர்மானங்களை எடுக்க வேண்டியதில்லை. நாம் தீர்மானிக்க வேண்டியது, இந்நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே அன்றி அரசியல் கட்சிகளுக்கு பயந்து அல்ல என்பதை நான் நம்புகிறேன்.

எனது அரசியல் பயணத்தை மக்கள் தீர்மானிப்பார்கள். இப்போது நான் என்ன செய்ய வேண்டுமோ அதனை செய்கிறேன். முன்னிற்க வேண்டிய இடங்களில் முன்னிற்பேன். சிலர் 75 வருட அரசியலை குறை கூறுகின்றனர், இன் னும் சிலர் ராஜபக்ஷ குடும்பத்தினால் தான் 75 வருட சாபம் எனக் கூறுகின்றனர்.

எமது குடும்பம் 100 வருட அரசியலில் ஈடுபட்டுள்ளது. ஆனால் 75 வருடம் ஆட்சி செய்ததில்லை. மஹிந்த ஆட்சியை கைப்பற்றும் போது 17 பில்லியன் பொருளாதாரத்தையே 2005ம்ஆண்டு பொறுப்பேற்றார். யுத்தத்துடன் கூடிய ஒரு பொருளாதாரத்தையே பொறுப்பேற்றார் - என்றார். (அ)

# ஜனாதிபதி தேர்தலைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கே உண்டு

## தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் திகதியை தீர்மானிக்கும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் மாதம் முதல் கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக முன்னெடுக்கப்படும். வாக்காளர் பெயர் பதிவு நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்கள் சரியான தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய தேர்தல்கள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்களின் உரிமை வாக்குரிமை ஊடாக உறுதிப்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு இடம்பெறவுள்ள தேர்தல் தீர்மானமிக்கது.அரசியலமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும்.ஜனாதிபதியின் ஐந்தாண்டு பதவி காலம் எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் நிறைவடையும்.

1981 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவு சட்டத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு ஒரு மாதம்,இரு மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.

இதற்கமைவாக எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் திகதியை தீர்மானிக்கும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் மாதம் முதல் கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக முன்னெடுக்கப்படும். வாக்காளர் பெயர் பதிவு நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்கள் சரியான தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வாக்காளர் பெயர் பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூலை மாதமளவில் நிறைவடையும் அதனை தொடர்ந்து வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டு நான்கு அல்லது நான்கு வா காலத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

இந்த ஆண்டு எந்த தேர்தலும் நடத்தப்படலாம்.ஜனாதிபதி தேர்தலை தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு. பொதுத்தேர்தலை ஜனாதிபதி தீர்மானிக்கலாம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நீதிமன்றம் தீர்மானிக்கலாம். மாகாண சபைத் தேர்தலை பாராளுமன்றம் தீர்மானிக்கலாம். ஆகவே இந்த ஆண்டு தீர்மானமிக்கது - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் இறுதியில் சபலெங்கா!

மெல்பர்ன், ஜன. 27

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் பெலாரஸின் அரினா சபலெங்கா, சீனாவின் கின்வென் ஷெங் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

ஆண்டின் முதல் "கிராண்ட்ஸ்லாம்" போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெல்பர்னில் நடக்கிறது. இந்தத் தொடர் தற்போது இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதிப் போட்டி ஒன்றில் இரண்டாம் நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலெங்கா, 4ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ காபுடன் மோதினார். இதில் அரினா சபலெங்கா 7-6 (7-2), 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றோர் அரையிறுதியில் 15ஆம் நிலை வீராங்கனையான சீனாவின் கின்வென் ஷெங், 93ஆம் நிலை வீராங்கனையான டயானா யாஸ்ட்ரெம்ஸ்காவுடன் மோதினார். இதில் கின்வென் ஷெங் 6-4, 6-4 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். (ஐ)

# அஸ்வின் - ஜடேஜா புதிய சாதனை!



ஹைதராபாத், ஜன. 27

இந்தியாவின் அஸ்வின் - ஜடேஜா கூட்டணி புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. ஹைதராபாத்தில் நடக்கும் முதல் டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 246 ஓட்டங்களை எடுத்தது. பென் ஸ்ரோக்ஸ் மட்டும் 70 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்தார்.

இந்திய அணி தரப்பில் அதிகபட்சமாக அஸ்வின் மற்றும் ஜடேஜா தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். இந்த 6 இணை கைப்பற்றிய 6 விக்கெட்கள் மூலம் புதிய சாதனையையும் படைத்தனர். சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணிக்காக அதிக விக்கெட்கள் கைப்பற்றிய இணை என்பதே அது.

அஸ்வின் - ஜடேஜா - 503 விக்கெட்கள் (50 டெஸ்ட்), கும்ப்ளே - ஹர்பஜன் சிங் - 501 விக்கெட்கள் (54 டெஸ்ட்), சகீர் கான் - ஹர்பஜன் சிங் - 474 விக்கெட்கள் (59 டெஸ்ட்) (ஐ)

## ஆஸி. ஓப்பன் ரென்னிஸ்:

# ஜோகோவிச்சை வெளியேற்றி சின்னர் இறுதி போட்டிக்கு தகுதி!





மெல்பர்ன், ஜன. 27

கடுமையான நெருக்கடிக்கு மத்தியில் முதல்நிலை வீரரான ஜோகோவிச்சை தோற்கடித்து ஆஸி. ஓப்பன் ரென்னிஸின் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார் ஜோனிக் சின்னர்.

ஆண்டின் முதல் 'கிராண்ட்ஸ்லாம்' போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெல்பர்னில் நடக்கிறது. இந்தத் தொடர் தற்போது இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடந்த முதல் அரையிறுதிப் போட்டியில் தரவரிசையில் முதல்நிலை வீரரான ஜோகோவிச் (செர்பியா), ஜோனிக் சின்னர் (இத்தாலி) உடன் மோதினார்.

ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடிய சின்னர் ஜோகோவிச்சிற்கு கடும் நெருக்கடி கொடுத்தார். முதல் 2 செற்களை எளிதில் கைப்பற்றிய சின்னர், 3ஆவது செற்றில் சமநிலை தகர்ப்பு வரை போராடி அதனை இழந்தார். இருப்பினும் 4ஆவது செற்றில் எழுச்சி பெற்ற அவர் அதனை கைப்பற்றி வெற்றி பெற்றார்.

இந்த போட்டியில் சின்னர் 6-1, 6-2, 6-7 மற்றும் 6-3 என்ற செற் கணக்கில் ஜோகோவிச்சை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். (ஐ)



# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் மேற்கிந்தியா தடுமாற்றம்!

பிரிஸ்பேன், ஜன. 26

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் மேற்கு இந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 266 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பன் நகரில் நேற்றுமுன்தினம் தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்தியத் தீவுகள் 25.2 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 64 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது.

அணித் தலைவர் கிரெய்க் பிராத்வெயிட் 4, தகேநரைன் சந்தர்பால் 21, கிர்க் மெக்கென்சி 21, அலிக் அத்தனாஸ் 8, ஜஸ்டின் கிரீவ்ஸ் 6 ரன்களில் நடையை கட்டினர்.

6ஆவது விக்கெட்டுக்கு கவேம் ஹாட்ஜூடன் இணைந்த ஜோஷ்வா டி சில்வா சிறப்பாக இன்னிங்ஸை கட்டமைத்தார். இதனால் 75ஆவது ஓவரில் மேற்கு இந்தியத் தீவுகள் அணி 200 ஓட்டங்களை எட்டியது. சிறப்பாக துடுப்பெடுத்தாடிய கவேம் ஹாட்ஜ் 194 பந்துகளில், ஒரு சிக்ஸர், 8 பௌண்ட்ரிகளுடன் 71 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மிட்செல் ஸ்டார்க் பந்திலும் ஜோ/வா டி சில்வா 157 பந்துகளில், 7 பௌண்ட்ரிகளுடன் 79 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நதன் லயன் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

அதிரடியாக விளையாடிய அல்சாரி ஜோசப் 22 பந்துகளில், 7 பௌண்ட்ரிகளுடன் 32 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜோஷ் ஹேசில்வுட் பந்தில் ஆட்டமிழந்தார்.

நேற்றுமுன்தினம் முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் மேற்கு இந்தியத் தீவுகள் அணி 89.4 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 266 ஓட்டங்கள் எடுத்தது. கெவின் சின்கிளேர் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

அவுஸ்திரேலிய அணி தரப்பில் மிட்செல் ஸ்டார்க் 4 விக்கெட்களை வீழ்த்தினார். ஜோஷ் ஹசில்வுட் 2 விக்கெட்களையும், பட் கம்மின்ஸ், நதன் லயன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

# ஒருநாள் கிரிக்கெட்; சிறந்த வீரர் கோலி!




டுபாய், ஜன. 26

ஐ. சி. சி. வழங்கும் 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருதை வென்றார் இந்தியாவின் விராட் கோலி. ஒருநாள் கிரிக்கெட்டின் ஆண்டின் சிறந்த வீரர் விருதை அதிக முறை வென்ற வீரர் என்ற புதிய சாதனையும் விராட் கோலி படைத் தார். இந்த விருது நான்காவது முறையாக விராட் கோலிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடந்த உலகக் கிண்ணத்தில் சிறப்பாக விளையாடி, அதிக ஓட்டங்களை குவித்து சாதனை படைத்த விராட் கோலி, உலகக்கிண்ணத் தொடரின் தொடர் நாயகன் விருதை வென்றிருந்தார். அத்துடன், அந்த தொடரில் மட்டும் 765 ரன்கள் குவித்தார் கோலி.

2023ஆம் ஆண்டில் 24 இன்னிங்ஸ்களில் விளையாடி 6 சதங்கள் மற்றும் 8 அரைச்சதங்களைப் பதிவுசெய்து, 72.47 சராசரியுடன் 1,377 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

அதுமட்டுமில்லாமல், 2023இல் 27 போட்டிகளில் விளையாடி 1,377 ஓட்டங்கள், ஒரு விக்கெட் மற்றும் 12 பிடிகள் எடுத்திருந்தார் விராட் கோலி. இந்த காரணங்களால் ஐ. சி. சி. 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருதை விராட் கோலிக்கு அறிவித்துள்ளது. (ஐ)

# டெஸ்ட் கிரிக்கெட் சிறந்த வீரர் கவாஜா!




டுபாய், ஜன. 26

2023ஆம் ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருதை உஸ்மான் கவாஜா வென்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) ஒவ்வொரு வருடமும் சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை, சிறந்த ஒரு நாள் அணி, இருபது - 20 அணி, டெஸ்ட் அணி உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வழங்கி வருகிறது.

இதன்படி 2023ஆம் ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரர் விருதுக்கு 4 பெயர்களை பரிந்துரைத்தது.

இதில், இந்தியாவின் அஸ்வின், அவுஸ்திரேலிய வீரர்களான டிராவிஸ் ஹெட், உஸ்மான் கவாஜா, இங்கிலாந்தின் ஜோ ரூட் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இவர்களில் சிறந்த டெஸ்ட் வீரர் விருதை அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் உஸ்மான் கவாஜா வென்றுள்ளார். இவர் கடந்த ஆண்டில் 13 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1,210 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

## சவூதி அரேபியாவில் முதல் மதுபான கடை:

# இஸ்லாமிய அடையாளத்தில் இருந்து விலகி செல்கிறாரா முகமது பின் சல்மான்?



சவூதி அரேபியா ரியாத்தில் முஸ்லிம் அல்லாத வெளிநாட்டினருக்காக மது விற்பனை செய்ய ஒரு கடையைத் திறக்கப்போவதாகக் கூறியுள்ளது.

கடந்த 70 ஆண்டுக்கால வரலாற்றில் சவூதி அரேபியாவில் மது விற்கப்படுவது இதுவே முதல்முறை. ரியாத்தில் திறக்கப்படும் இந்த மதுபானக் கடையின் வாடிக்கையாளர்களாக பெரும்பாலும் தூதரகங்களில் பணியாற்றுபவர்களே இருப்பார்கள்.

பல்வேறு நாடுகளின் தூதரக ஊழியர்கள பல ஆண்டுகளாக சீல் செய்யப்பட்ட மதுபானங்களை இறக்குமதி செய்து வருகின்றனர். அவை அரசுமுறை பேக்கேஜ்கள் என அழைக்கப்படுகின்றன.



தற்போது திறக்கப்படவுள்ள இந்த மதுபானக் கடையின் மூலம் சட்ட விரோத மது வியாபாரம் தடுக்கப்படும் என சவூதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சவூதி அரேபியாவில் கடந்த 1951 ஆம் ஆண்டில், அரசர் அப்துல் ஆஸிஸின் மகன் மது அருந்துவது தொடர்பான சர்ச்சையில் பிரிட்டிஷ் தூதரக அதிகாரியை சுட்டுக்கொன்றார். அதைத் தொடர்ந்து 1952ஆம் ஆண்டு முதல் சவூதியில் மதுபானம் தடை செய்யப்பட்டுள்ளது.

ஏ.எஃப்.பி, ராய்ட்டர்ஸ் செய்தி முகமைகள் பார்த்த ஆவணங்களின்படி, இந்தப் புதிய மதுக்கடை ரியாத்தின் தூதரக குடியிருப்பில் திறக்கப்படும்.

### மதுபானக் கடைக்கு விதிக்கப்படும் வரம்புகள் என்ன?

மதுபானம் விற்பனை செய்வதற்கான திட்டங்களைப் பற்றி நன்கு அறிந்த அதிகாரிகள் ராய்ட்டர்ஸ் செய்தி முகமையிடம் இன்னும் சில வாரங்களில் கடை திறக்கப்படலாம் என்று தெரிவித்தனர். இருப்பினும், அந்தக் கடைக்குச் சில வரம்புகள் உள்ளன. அவை, மதுபானம் தேவைப்படும் தூதரக அதி காரிகள் அதற்கு முதலில் பதிவு செய்து, பின்னர் அரசிடமும் அனுமதி பெற வேண்டும்.



மதுக்கடைகள் 21 வயதுக்கு உட்பட்ட எவரையும் அனுமதிக்காது, அனைத்து நேரங்களிலும் தகுந்த உடை அணிந்திருக்க வேண்டும்.

மது அருந்துபவர்கள் வேறு யாருக்காகவும் மதுவை ஆர்டர் செய்ய முடியாது. அதாவது, ஒருவரது ஓட்டுநர் மூலமாக ஆர்டர் செய்வது போன்ற வற்றைச் செய்யக்கூடாது. செய்திக ளின்படி, மதுபானம் வாங்குவதற்கு மாதாந்திர வரம்பும் இருக்கும்.

இருப்பினும், ஏ.எஃப்.பி செய்தி முகமை பார்த்த ஆவணங்களின்படி, இந்த வரம்புகள் கண்டிப்பானதாக இருக்காது என்றும் தெரிகிறது.

### ஒருவர் எவ்வளவு மது வாங்கலாம்?

பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 240 'புள்ளிகள்' என்ற அளவில் மதுபானம் கிடைக்கும். ஆறு புள்ளிகளுக்கு ஒரு லிட்டர் ஸ்பிரிட்ஸ் என்ற கணக்கில் அளவிடப்படும். அதுவே ஒரு லிட்டர் ஒயின் மூன்று புள்ளிகளாகவும், ஒரு லிட்டர் பீர் ஒரு புள்ளியாகவும் கணக்கிடப்படும்.

சராசரி வெளிநாட்டினருக்கு மதுபானம் கிடைக்குமா அல்லது தூதரக அதிகாரிகளுக்கு மட்டுமே கிடைக்குமா என்பது இன்னும் கூறப்படவில்லை. ரியாத்தின் தினசரி வாழ்வில் மதுபானம் இனி ஒரு பகுதியாக மாறும். ஆனால், மது அருந்துவோர் எங்கு குடிக்கிறார்கள், மது அருந்திய பிறகு எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதே அதில் மிக முக்கியமான விஷயம்.

தற்போது, சவூதி அரேபியாவில் மது அருந்துதல் அல்லது மதுவை வைத்திருத்தல் போன்ற செயல்களுக்கு, சிறைத் தண்டனை, பொதுவில் கசையடி வழங்குதல், அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டினரை நாடு கடத்துதல் ஆகிய தண்டனைகளை வழங்கும் சட்டம் அமலில் உள்ளது.

மதுபான கொள்கை பற்றிய புதிய ஆவணங்களின்படி, சவூதி நிர்வாகம் புதிய விதிகளை உருவாக்கி வருகிறது. புதிய விதிகளின்படி, குறிப்பிட்ட அளவு மதுபானம் கொண்டு வர அனுமதிக்கப்படும். இதன்மூலம் கட்டுப்பாடற்ற மது விற்பனைகள் நிறுத்தப்படும்.

பல ஆண்டுகளாக, தூதரக ஊழியர்கள் தங்கள் சொந்த மதுபான பேக்கேஜ்களை பயன்படுத்துகின்றனர். சவூதி நிர்வாகம் இந்த விஷயத்தில் தலையிடவில்லை. சவூதி அரேபியாவின் இந்த நிலைப்பாடு அதன் 'விஷன் 2030' என்ற கொள்கை வழியாகவும் பார்க்கப்படுகிறது.

சவூதி அரேபியாவின் பிரதமரும் பட்டத்து இளவரசருமான முகமது பின் சல்மான் இந்தப் பார்வையின் கீழ் கடுமையான விதிகளை தளர்த்தி வருகிறார். மற்ற வளைகுடா நாடுகளும் மது விஷயத்தில் இதேபோன்ற கொள்கைகளைக் கொண்டுள்ளன.

இருப்பினும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் கத்தாரில், 21 வயதுக்கு மேற்பட்ட முஸ்லிம் அல்லாதவர்கள் ஹோட்டல்கள், கிளப்புகள், பார்களில் மது விற்க அனுமதிக்கப்படுகிறார்கள். சவூதி அரேபியாவின் ஆவணத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் கத்தாரை போலவே செய்யுமா, இல்லையா என்பது இன்னும் குறிப்பிடப்படவில்லை. இஸ்லாத்தில் மது அருந்துவது தடை செய்யப்பட்டுள்ளது. சவூதி அரேபியாவில் 1952ஆம் ஆண்டு வரை மதுவின் மீது ஒருவித சமரச மனப்பான்மை இருந்தது.

ஆனால், 1951இல், இளவரசர் மிஷாரி பின் அப்துல் அஜிஸ் அல்-சௌத், ஜெட்டாவில் பிரிட்டிஷ் தூதர் சிரில் ஓஸ்மானை சுட்டுக் கொன்றார். ஒரு விழாவில் மது வழங்க மறுத்ததைத் தொடர்ந்து அவர் அப்படிச் செய்தார். இந்தச் சம்பவத்திற்கு ஓராண்டு கழித்து மன்னர் அப்துல் அஜீஸ் மது விற்பனை மற்றும் அருந்துவதை முற்றிலுமாகத் தடை செய்தார். கொலை வழக்கில் மிஷாரிக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

### பெண்களுக்கு வாகனம் ஓட்டும் உரிமம்

கடந்த 2018ஆம் ஆண்டில், சவூதி அரேபியாவில் முதன்முறையாக பெண்களுக்கு வாகனம் ஓட்டும் உரிமம் வழங்கும் செயல்முறை தொடங்கப்பட்டது. ஜூன் 2018இல், முதல்முறையாக 10 பெண்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு, சவூதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மான், பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவை எடுத்தார்.

அதைத் தொடர்ந்து 2018ஆம் ஆண்டு ஜூன் 24 முதல், சவூதி அரேபியாவில் பெண்கள் சாலைகளில் கார் ஓட்டுவதைக் காண முடிந்தது.

பழமைவாத நாட்டை நவீனமயமாக்கும் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானின் தாராளமயமாக்கல் பிரசாரத்தின் ஒரு பகுதியாக பெண்களுக்கு வாகனம் ஓட்டும் உரிமத்தை வழங்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இத்தகைய நடவடிக்கைகளை எடுத்தும்கூட, பட்டத்து இளவரசரும் விமர்சனங்களை எதிர்கொள்கிறார்.

சவூதி அரேபியாவில் உள்ள பெண்களுக்கு வாகனம் ஓட்டும் உரிமம் வழங்க வேண்டுமென்று பிரசாரம் செய்த பெண்ணுரிமை ஆர்வலர்கள் மீது, வெளி சக்திகளுடன் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டி சவூதி அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2016-17இல் விஷன் 2030 திட்டம் அறிவிக்கப்பட்டது. சவூதி அரேபியாவின் எண்ணெய் ஏற்றுமதியைச் சாந்திருப்பதைக் குறைப்பதன் மூலம் அதன் பொருளாதாரத்தைப் பல்வகைப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.

நாட்டிலுள்ள பிற தொழில்களை மேம்படுத்துவது, சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது, தனியார் தொழில்களை ஊக்குவிப்பது, நாட்டில் வேலை வாய்ப்பை உருவாக்குவது, ஆகியவற்றின் மூலம் அரசின் சுமையைக் குறைக்க முடியும். (15ஆம் பக்கம் பார்க்க)



# குழந்தைகள் வளர்ந்த பிறகு பெற்றோரை பிரிந்து தனியாக வாழ்வது சரியா?

சமீபத்தில், இத்தாலியின் வடக்கு நகரமான பாவியாவில், 75 வயதான மூதாட்டி ஒருவர், தனது மகன்களை வீட்டை விட்டு வெளியேற்றுமாறு நீதிமன்றத்தை அணுகியுள்ளார்.

அவரது மகன்களில் ஒருவரது வயது 40, மற்றவருக்கு வயது 42. தனித்தனியாக வாழுமாறு தனது மகன்களிடம் பல முறை கோரிக்கை விடுத்தும் அவர்கள் செவிசாய்க்கவில்லை என அந்தப் பெண் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இரு மகன்களும் டிசம்பர் 18ஆம் தேதிக்குள் வீட்டை காலி செய்ய வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தீர்ப்பை வழங்கும்போது, “குழந்தைகளைப் பராமரிப்பது பெற்றோரின் பொறுப்பு என்பதால் ஆரம்பத்தில் மகன்கள் தங்கியிருக்கலாம். ஆனால், இப்போது அவர்கள் 40 வயதுக்கு மேல் இருப்பதால், அந்த வாதத்தை தற்போது முன்வைக்க முடியாது,” என நீதிமன்றம் கூறியது.

குழந்தைகள் வயது வந்தவுடன் பெற்றோரின் வீட்டைவிட்டு வெளியேற வேண்டும் என எதிர்பார்க்கும் நாடுகளில், இந்த முடிவு புதிய விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

குழந்தைகள் எந்த வயதில் பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழத் தொடங்க வேண்டும், வயது அல்லது நிதி நிலைமையின் அடிப்படையில் இந்த முடிவை எடுக்க வேண்டுமா என்பது குறித்து விவாதிக்கப்படுகிறது.

இந்தியா உட்படப் பல நாடுகளில், ஒரே வீட்டில் பல தலைமுறைகள் வாழ்வது பொதுவானது. ஆனால், சில நாடுகளில் குழந்தைகள் பெரியவர்கள் அல்லது பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்கும்போது பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழ வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு செய்ய முடியாதவர்கள், அந்தந்த நாட்டில் சமூக அழுத்தங்களையும் அவதூறுகளையும் சந்திக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக, இத்தாலியில் பெற்றோருடன் வீட்டில் வசிக்கும் பெரியவர்களின் எண்ணிக்கை அதிகம்.

**பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழும் வழக்கம்**

ஷிம்லாவில் உள்ள ஹிமாச்சல பிரதேச பல்கலைக்கழகத்தின் சமூகவியல் உதவிப் பேராசிரியரான டாக்டர் ஸ்னேஹ் பாரத் கூறுகையில், “மேற்கத்திய கலாசாரத்தில் சுயசார்பு மற்றும் சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது, மேலும் குழந்தைகளும் அதே வழியில் சமூகமயமாக்கப்படுகிறார்கள்.

“மேற்கத்திய நாடுகளில், குழந்தைகள் வயது வந்தவுடன் அவர்களைப் பிரிக்கும் பாரம்பரியம் உள்ளது, இதனால் அவர்கள் சுயசார்புடையவர்களாக ஆக்கப்படுவார்கள்,” என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், “அங்கு வயது வந்த குழந்தைகள் தங்கள் பொறுப்புகளை ஏற்கும் திறன் பெற்றுள்ளனர் என்று நம்புகின்றனர். குழந்தைகளும் பெரியவர்களாக மாறும்போது தங்கள் வாழ்க்கையில் யாரும் தலையிடாதபடி சுதந்திரமாக வாழ விரும்புகிறார்கள்,” என்றார்.

**பெரியவர்கள் ஏன் பெற்றோருடன் வாழ்கிறார்கள்?**

இந்த நிலை, இத்தாலியில் மட்டுமல்ல. இந்தியாவின் கிராமம் மற்றும் நகரங்களிலும் இதே நிலைதான்.

இந்தியாவில் பல தலைமுறைகள் ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்வதற்கு பொருளாதார காரணங்கள் மட்டுமல்ல, சில கலாசார காரணங்களும் உள்ளன என்கிறார் பேராசிரியர் ஸ்னேஹ் பாரத்.

“பல தலைமுறைகள் ஒன்றாக வாழும் கூட்டுக் குடும்பங்கள், இந்திய கலாசாரத்தின் ஒரு பகுதி. அத்தகைய குடும்பங்களில், அனைத்து உறுப்பினர்களும் பொருளாதார, சமூக மற்றும் மனநல பாதுகாப்பைப் பெறுகிறார்கள். குடும்பத்தின் பெரியவர்கள் குழந்தைகளைக் கவனித்துக் கொள்கிறார்கள், இளைஞர்கள் தங்கள் பெரியவர்களைக் கவனித்துக் கொள்கிறார்கள்,” என்றார் பேராசிரியர் ஸ்னேஹ் பாரத்.



குழந்தைகள் பெரியவர்கள் ஆன பிறகும் பெற்றோருடன் வாழ வேண்டியதற்குப் பல காரணங்கள் உள்ளன என்கிறார் பேராசிரியர் ஸ்னேஹ் பாரத்.

“உதாரணமாக, திருமணத்திற்குப் பிறகு மணமகள் வழக்கமாக தனது மாமியார்களுடன் வாழச் செல்வார்கள். இது பொதுவாக மூதாதையர் வீடு அல்லது பூர்வீக சொத்து என்பதன் காரணமாக மக்கள் ஒன்றாக வாழ்கிறார்கள்,” என்றார்.

டில்லி உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பிரணாப் கப்ரு, இந்தியாவில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பெரியவர்களாகும் வரை அவர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

“சமூக நெறிமுறைகள் வேறுபட்டிருக்கலாம், ஆனால் ஒரு குழந்தை முதிர் வயதை அடையும் வரை பெற்றோரிடம் பராமரிப்பு கேட்கலாம் என்று சட்டம் கூறுகிறது,” என்றார்.

இத்தாலியில் வயதான பெண் ஒருவர் தனது மகன்களின் பொறுப்பை ஏற்க முடியாமல் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளார்.

பிபிசியின் இணை ஆசிரியர் அட்ரியானா அர்பானோ கூறுகையில், “அந்தப் பெண்ணின் இரு மகன்களும் வேலை செய்தார்கள். ஆனால் வீட்டுச் செலவுகளுக்கோ மற்ற வேலைகளுக்கோ உதவவில்லை. அவர்கள் தாய்க்கு சுமையாக இருந்தார்கள்,” என்றார்.

இந்தியாவிலும் பெற்றோருடன் இதுபோன்ற நடத்தைகள் அதிகரித்து வருகின்றன. வழக்கறிஞர் பிரணவ் கப்ரு கூறுகையில், பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் சுரண்டல்களால் சோர்ந்துபோய், மூத்த குடிமக்கள் சட்டத்தின் கீழ் மூத்த குடிமக்கள் தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்கிறார்கள்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலர் வயதான மற்றும் ஆதரவற்ற பெற்றோரின் சொத்துகளைக் கையகப்படுத்துவது அல்லது அவர்களைக் கவனிக்காமல் இருப்பது காணப்படுவதாக அவர் கூறுகிறார்.

**எது சரியான தேர்வு?**

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வீட்டைவிட்டு வெளியே அனுப்புவது ஒரு அசாதாரண சம்பவமாகக் கருதப்படுவதால் இத்தாலியில் நடந்த சம்பவம் அதிகம் விவாதிக்கப்பட்டது.

லக்னௌவில் உள்ள உளவியலாளர் ராஜேஷ் பாண்டே இதுகுறித்துப் பேசுகையில், “பெற்றோர்கள் எப்போதும் தங்கள் குழந்தைகளை நேசிக்க வேண்டும் என்றும், நிபந்தனையின்றி கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் சமூகம் எதிர்பார்க்கிறது,” என்றார்.

சிம்லாவில் உள்ள ஹிமாச்சல பிரதேச பல்கலைக்கழகத்தின் சமூகவியல் உதவிப் பேராசிரியரான டாக்டர். ஸ்னேஹ் பாரத், இங்கு சமூகத்தின் தாக்கம் மக்களின் வாழ்வில் அதிகமாக உள்ளதாகக் கூறினார்.

குழந்தைகள் பெரியவர்கள் ஆன பிறகு பெற்றோருடன் வாழ்வதா இல்லையா என்பது அவர்களின் பொருளாதார, கலாசார நிலை மற்றும் அவர்களின் விருப்பம் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இதுகுறித்து பேராசிரியர் ஸ்னேஹ் கூறுகையில், “ஒருவருக்கொருவர் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் புரிந்துகொண்ட பிறகே இந்த விஷயத்தில் எந்த முடிவும் எடுக்க வேண்டும்,” என்றார்.

இதுபோன்ற சூழ்நிலை ஏற்பட்டால், பெற்றோர்கள் குழந்தைகளை வீட்டைவிட்டு வெளியே அனுப்பலாம் அல்லது அவர்களிடமிருந்து பராமரிப்புக்கான செலவை வசூல் செய்ய மனு தாக்கல் செய்யலாம் என்று வழக்கறிஞர் பிரணவ் விளக்குகிறார்.

இதற்கு, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 125 மற்றும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் போன்ற சட்டப் பிரிவுகளின் படி உதவியைப் பெறலாம்.

# சவூதி அரேபியாவில் முதல் மதுபான கடை

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பட்டத்து இளவரசர் இஸ்லாமிய அடையாளத்தில் இருந்து விலகிச் செல்கிறாரா?**

தற்போது 38 வயதாகும் முகமது பின் சல்மன் சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசராக உள்ளார். பட்டத்து இளவரசர் கடந்த ஏழு ஆண்டுகளாக நாட்டை வழிநடத்தி வருகிறார்.

அவரது தலைமையின்கீழ், பட்டத்து இளவரசர் சவூதி அரேபியாவில் பல முடிவுகளை எடுத்தார். அவை பாராட்டப்பட்டன. அதோடு, இஸ்லாமிய பழமைவாத நாடான சவூதி அரேபியாவை ஒரு நவீன நாடாக மாற்றுகிறார் என்றும் கூறப்பட்டது.

பட்டத்து இளவரசர் 2016இல் விஷன் 2030 திட்டத்தைப் பற்றி அறிவித்தார். அதன்கீழ், பல வகையான சீர்திருத்தங்கள் தொடங்கப்பட்டன. அவர் சவூதியை மேலும் தாராளமயமாக்கினார். பட்டத்து இளவரசார் சினிமா, கச்சேரிகள் மீதான தடையை நீக்கினார்.

ஹிப்-ஹாப் கலைஞர்கள்கூட அழைக்கப்பட்டனர். பெண்கள் வாகனம் ஓட்டும் உரிமையைப் பெற்றனர். அவர்களின் உடையில் தாராளமயம் காட்டப்பட்டது.

பட்டத்து இளவரசர் பிற்போக்கு மதகுருக்களின் பங்கை மட்டுப்படுத்தினார். மத போலீஸ் ஒழிக்கப்பட்டது. இதனுடன், இஸ்ரேலுடனான உறவுகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளையும் முகமது பின் சல்மான் ஆராய்ந்தார்.

**சவூதி அரேபியா எந்தப் பாதையில் செல்கிறது?**

அமெரிக்க இதழான தி அட்லான்டிக், 2022இல் சவூதி பட்டத்து இளவரசரிடம் ‘சவூதி அரேபியாவின் இஸ்லாமிய அடையாளத்தைப் பலவீனப்படுத்தும் அளவுக்கு நவீனமயமாக்குவாரா?’ என்று கேட்டது.

அந்தக் கேள்விக்குப் பதிலளித்த இளவரசர், “உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் வெவ்வேறு கருத்துகள், மதிப்புகளின் அடிப்படையில் நிறுவப்பட்டது. எடுத்துக்காட்டாக, அமெரிக்கா, ஜனநாயகம், சுதந்திரம், சுதந்திரப் பொருளாதாரம் போன்ற மதிப்புகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்புகளின் அடிப்படையில் மக்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஆனால், அனைத்து ஜனநாயகங்களும் நல்லவையா? அவை அனைத்தும் சரியாகச் செயல்படுகின்றனவா? நிச்சயமாக இல்லை,” என்றார்.

மேலும், “இந்த நாடு இஸ்லாத்தின் மதிப்புகள் மற்றும் சிந்தனைகளின் அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது பழங்குடி கலாசாரம், அரபு கலாசாரம். சவூதிக்கென கலாசாரம், நம்பிக்கைகள் உள்ளன. இது எங்கள் ஆன்மா. அதை விட்டுவிட்டால் நாடு அழிந்துவிடும். சவூதி அரேபியாவை சரியான வளர்ச்சி, நவீனமயமாக்கல் பாதையில் கொண்டு வருவது எப்படி என்பதுதான் கேள்வி. ஜனநாயகம், சுதந்திர சந்தைகள், சுதந்திரத்தைச் சரியான பாதையில் எப்படி வைத்திருப்பது என்பது பற்றிப் பார்க்கையில் அமெரிக்காவுக்கு இதே போன்ற கேள்விகள் உள்ளன. இந்தக் கேள்வி முக்கியமானது. ஏனெனில், அவர்கள் தவறான பாதையில்கூடச் செல்லலாம்.

ஆகவே, நாங்கள் எங்கள் மதிப்புகளில் இருந்து விலகிச் செல்லமாட்டோம். ஏனெனில், அது எங்கள் ஆன்மா. சவூதி அரேபியாவில் புனித மசூதிகள் உள்ளன. அவற்றை யாராலும் அகற்ற முடியாது. அந்தப் புனித மசூதிகள் எப்போதும் நிலைத்திருப்பதை உறுதி செய்வது எங்கள் பொறுப்பு. மேலும், நாட்டை சவூதி மக்களுக்காகவும் பிராந்தியத்திற்காகவும் சரியான பாதையில் வைத்திருக்க விரும்புகிறோம். அமைதி மற்றும் சகவாழ்வின் அடிப்படையில் உலகின் பிற பகுதி களுடன் இணைக்க விரும்புகிறோம்,” என்று பதிலளித்தார் முகமது பின் சல்மான். •

# ஆண் குழந்தைகளை வன்புணர்வு செய்வதும் குற்றவியல் குற்றமே!

## சட்டங்களை திருத்த அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 27

ஆண் குழந்தைகளை வன்புணர்வு செய்வதை குற்றவியல் குற்றமாக நிறுவவும், பெண்களை பாலியல் வன்புணர்வு செய்வது தொடர்பான சட்டங்களைத் திருத்தவும், அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்காக குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களை அறிமுகப்படுத்த அமைச்சரவை ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி பெண் மற்றும் ஆண் குழந்தைகளை வன்புணர்வு செய்வது குற்றவியல் குற்றமாக கருதப்படும்.

இந்தநிலையில் சட்ட வரைவாளர், இதற்கான வரைவை மேற்கொண்டுள்ள நிலையில், சட்டமா அதிபரின் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிப்பதற்கும் நாடாளுமன்ற ஒப்புதலைப் பெறுவதற்கும் அமைச்சரவை, துறைசார் அமைச்சருக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# ரயிலில் செல்பி எடுக்க முற்பட்ட ரஷ்ய பெண் தவறி வீழ்ந்து காயம்

கொழும்பு, ஜன. 27

ரயிலில் பயணித்த ரஷ்ய பெண்ணொருவர் செல்பி எடுக்க முற்பட்டபோது தவறி வீழ்ந்து பலத்த காயமடைந்து தெமோதர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

25 வயதுடைய கிறிஸ்டினா அலக்வானா என்பரே இவ்வாறு காயமடைந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர். இந்தப் பெண் நேற்று வெள்ளிக்கிழமை ஹிக்கடுவையில் இருந்து எல்லைக்கு சென்ற ரயிலில் பயணித்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேலும் இவரது கடவுச்சீட்டு இவர் தங்கியிருந்த ஹோட்டலில் வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# இனிப்பு பண்ட தொழிலுக்கு அரசாங்கம் ஆதரவளிக்கும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 27

இனிப்புப் பண்டத் தொழில் துறையை முன்னணி ஏற்றுமதித் துறையாக மாற்றுவதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொக்கோ உள்ளிட்ட பயிர்களைப் பயிரிடுவதற்கு அரசாங்கத்திற்கு சொந்தமான தோட்டங்களை குத்தகை அடிப்படையில் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சிலாபம் மற்றும் குருநாகல் பிரதேசங்களில் உள்ள தோட்டங்களுக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளையும், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்துக்கு சொந்தமான ஏனைய காணிகளையும் இதற்காகப் பயன்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதுவரையில் பயன்படுத்தப்படாத மகாவலி ஏ மற்றும் பி வலயங்களில் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், நாட்டில் போட்டிமிக்க ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக தேசிய உற்பத்தித் திறன் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடுகளுடன் தற்போதுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளையும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளையும் வலுப்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், தென்னை ஆராய்ச்சி நிறுவனங்களும் நவீனமயப்படுத்தப்பட்டு வருவதாகவும் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஆராய்ச்சித் துறைக்காக சுமார் 08 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

# இலங்கை - தாய்லாந்து இடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

கொழும்பு, ஜன. 27

இலங்கைக்கும், தாய்லாந்துக்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான யோசனையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமைச்சரவையில் முன்வைத்திருந்த நிலையில், அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையில் இதுவரை 9 சுற்று பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துள்ள நிலையில், சுதந்திர வர்த்தக ஒப்பந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கு சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது.

அத்துடன், ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கீழ் தற்போது இயங்கி வரும் தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள கறுவா திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு இவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் அதனால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளையும் கறுவா அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தண்டனைச் சட்டக்கோவையில் வன்புணர்வுக் குற்றம் தொடர்பில் சட்டத் திருத்தம் செய்வதற்கும், சட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு இவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது

அத்துடன், ஆண் பிள்ளைகள் வன்புணர்வுக்கு ஈடுபடுத்தப்படுவது குற்றச்செயல் எனவும், அதனை தண்டனைச் சட்டக்கோவையில் அறிமுகப்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# கொழும்பு மாநகர சபைக்கு ரூ. 500 கோடி வரி நிலுவை!

கொழும்பு, ஜன. 26

கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 500 கோடி ரூபாய் வரி நிலுவையாக உள்ளதாக தெரியவந்துள்ளது.

இவற்றில் 100 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை, அரச நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்களுக்காக அறவிடப்பட வேண்டியுள்ளதாக கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்தார்.

இதன் காரணமாக நகர அபிவிருத்திக்காக ஈடுபடுத்தக்கூடிய பெருமளவிலான நிதி இழக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், தமது வரித் தொகையை வருடத்தின் முற்பகுதியிலேயே செலுத்தும் நபர்களுக்கு கழிவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (ஐ)



# இலங்கையர்களின் கல்விக்கு உதவியளிக்கின்றது இந்தியா

## புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பம் கோரல்

கொழும்பு, ஜன. 27

பல்வேறு நிலைகளில் உள்ள இலங்கையர்களுக்காக சுமார் 200 முழு நிதியுதவி புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்களை இந்தியா கோரியுள்ளது.

மருத்துவம், துணை மருத்துவத்துறை மற்றும் சட்டப் படிப்புகளை தவிர்ந்த, ஏனைய துறைகளுக்காக இந்த புலமைப் பரிசில்கள், இந்திய நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஊடாக வழங்கப்படுகின்றன.

இலங்கையர்களுக்காக பிரத்தியேகமாக வழங்கப்படும் இந்தப் புலமைப்பரிசில்கள் 2024-2025 கல்வி அமர்வுக்கானது என கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

1) நேரு நினைவு புலமைப்பரிசில் திட்டம்: பொறியியல், அறிவியல், வணிகம், பொருளாதாரம், மனிதநேயம் மற்றும் கலை போன்ற பல்வேறு களங்களில் பட்டதாரி மற்றும் முதுகலை பட்டங்களை உள்ளடக்கியது.

2) மௌலானா ஆசாத் புலமைப் பரிசில் திட்டம்: பொறியியல், அறிவியல் மற்றும் விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கும் முதுகலை பட்டப் படிப்புகள்.

3) ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டம்: குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையில் பட்டதாரி படிப்புகளின் கீழ், இளங்கலை பொறியியல் மற்றும் இளங்கலை தொழில்நுட்பக் கற்கைகள்.

இந்த மூன்று திட்டங்களுக்காக, பாடநெறியின் முழு காலத்திற்கான முழு கல்விக் கட்டணம், மாதாந்த சத்துணவு கொடுப்பனவு மற்றும் நூல்கள் மற்றும் நிலையானவற்றுக்கான வருடாந்த மானியம் ஆகியவை வழங்கப்படும்.

அத்துடன் இந்தியாவின் அருகிலுள்ள இடங்களுக்கான விமானக் கட்டணம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கான கல்விச் சுற்றுப்பயணங்களுக்கான வருடாந்த மானியம், பல துணைப் பலன்களைத் தவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அந்தந்த வளாகங்களுக்குள் விடுதி வசதியும் வழங்கப்படும். இந்த புலமைப்பரிசில்களை வழங்குவ தற்காக இந்திய அரசாங்கம், இலங்கை அரசின் கல்வி அமைச்சுடன் இணைந்து தகுதியானவர்களை தெரிவு செய்யவுள் ளது. இலங்கை கல்வி அமைச்சின் www.mohe.gov.lk என்ற இணையத்தளத்தில் தேவையான விபரங்கள் தரப்பட்டுள்ளன.

எனவே ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள், தகுதிக்கான அளவுகோல்கள் மற்றும் தேர்வு நடைமுறைகள் பற்றி மேலும் அறிந்துக்கொள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் கொழும்பு (eduwing.colombo@mea.gov.in) அல்லது கல்வி அமைச்சு, இலங்கை அரசாங்கத்தை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். (அ)